REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஓகஸ்ட் 8 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 ANNIVERSARY தினகரன்
வரு. 92 இல. 188 | Thursday 08, August, 2024 | 16 பக்கங்கள் | 50/-




### தேர்தலில் வேட்பாளர்களின் எதிர்காலத்தை அன்றி

# நாட்டின் எதிர்காலம் குறித்து தீர்மானிக்கவும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



தங்களது எதிர்காலத்துக்காகவே ஏனைய வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாகவும், நாட்டினதும், மக்களினதும் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்காகவே தாம், போட்டியிடுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், அந் நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றி 06

- எனக்கு யாருடனும் போட்டி கிடையாது.
- பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஆரம்பித்த வேலைத்திட்டத்தை தொடர மக்கள் ஆணையை கோருகிறேன்.
- நாடு எதிர்கொள்ளும் உண்மை நிலையை அனைத்து வேட்பாளர்களும் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.
- ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான எவரையும் ஒருபோதும் பாதுகாக்க மாட்டேன்.

# IMF உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்யப்படும்

### ஐ.ம.ச. எம்.பி ஹர்ஷ டி சில்வா சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி நாட்டு மக்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், பொருளாதார வேலைத் திட்டத்தை உருவாக்க உள்ளதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன்களோடு நாடு உள்ள நிலையில், அதனை செலுத்துவதற்காக ரூபாவன்றி டொலர்களே அவசியமாவதாகவும் சபையில் தெரிவித்த அவர், ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் அளித்து, டொலர்களை சம்பாதிக்கும் வேலைத் திட்டங்களை உருவாக்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் ஏற்றுமதியைப் பிரதானமாகக் கொண்ட பொருளாதாரத்தின் மூலம் டொலர்களை சம்பாதித்துக் கொள்வதற்கு திட்டமிடப்படும் எனவும் ஹர்ஷ டி சில்வா எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் வரிச் சுமையைக் குறைத்து நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பெற்றோல் விலையை 150 ரூபாவிலிருந்து 400 ரூபா வரை அதிகரித்தது. அது அரசாங்கத்திற்கும் பெட்ரோலியக் கூட்டுத் தாபனத்திற்கும் இலாபமாகும்.

எமது மாற்றுக் குழுவொன்று தாம், அதிகாரத்திற்கு வந்ததும் பெட்ரோலின் விலையை 200 ரூபாவாக குறைப்பதாக குறிப்பிடுகின்றனர். நாம் அவ்வாறு கூறவில்லை. டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக 400 ரூபாவை வழங்கினாலும் அதில் 200 ரூபாவை மக்கள் வழங்குவதற்கும் மீதம் 200 ரூபாவை அரசாங்கம் வழங்குவதற்கான வேலைத் திட்டத்தையும் நாம் உருவாக்குவோம். சாதாரண 06

# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில், இந்த அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை தனிப்பட்ட காரணங்களால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என, பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பான கடிதத்தையும் தம்மிக்க பெரேரா கட்சித் தலைமைக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ஷ 06

# பணவீக்கம் 69 வீதத்திலிருந்து தற்போது 1.7 வீதமாக குறைவு

### பொருளாதாரத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கம் மேற்கொண்ட சிறந்த நடவடிக்கைகளால் பணவீக்கம் 69 வீதத்திலிருந்து 1.7 வீதமாகக் குறைந்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த சில நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டின் பொருளாதார வேகம், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 06

### அரச ஓய்வூதியக்காரர்களுக்கான

# ரூ. 3,000 விசேட கொடுப்பனவு திட்டமிட்டபடி வழங்கப்படும்

### அரசாங்கம் நேற்று தீர்மானம்



அரச ஓய்வூதியக்காரர்கள் சகலருக்கும் 3,000 ரூபாவை விசேட இடைக்கால கொடுப்பனவாக வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை, வாபஸ் பெறுமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள போதிலும் அந்த கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அமைச்சரவையின் கடந்த 24 ஆம் திகதிய விசேட கூட்டத்தில், இதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், இதை இடைநிறுத்த முடியாதென அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது வழங்கப்படும் 2,500 ரூபாவுக்கு மேலதிகமாக இடைக்கால 06

# வைத்தியர் அர்ச்சுனா பிணையில் விடுதலை

### மன்னார் நீதிமன்றம் உத்தரவு



மன்னார், பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா, சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். நேற்று (07) மன்னார் நீதவான் நீதிமன்றம் இவரை பிணையில் விடுவித்தது.

மன்னார் வைத்தியசாலைக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அத்துமீறி நுழைந்து 06

# தேர்தலில் யாரை ஆதரிப்பது? அ.இ.ம.காங்கிரஸின் முடிவு 14 இல்

### றிசாத் பதியுதீன் MP தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆதரிக்கும் வேட்பாளர் யார் என்பது எதிர்வரும் (14) காலை 10 மணிக்கு அறிவிக்கப்படுமென கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் 06

# தங்கத்தின் விலை வீழ்ச்சி



நாட்டில் தங்க விலை கடந்த சில மாதங்களாக சற்று ஏற்ற, இறக்கத்துடன் காணப்படுகிறது.

கடந்த சில நாட்களாக அதிகரித்திருந்த தங்கத்தின் விலை தொடர்ந்து, மூன்று நாட்களாக வீழ்ச்சியடைந்து வருகிறது. நேற்றைய (07) 06

# வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கையை, அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர்கள் அதிகரித்துள்ளமையே இதற்கான காரணமெனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர், வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பான கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. அதேநேரம், தேர்தல் சட்டங்கள் தொடர்பில் அந்தந்த பிரதேசத்துக்குப் பொறுப்பான 06

# இணையத் தளங்களில் தம்மை அவதூறுபடுத்தும் செய்திகள்

### சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - செல்வம் எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலில், தமது வளர்ச்சியை பொறுக்காத சிலர் தம்மைப்பற்றி அவதூறான வகையில் இணையத் தளங்களில் தகவல்களை வெளியிடுவதாகவும், அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி செல்வம் 06

# காணாமல்போன மீனவர்களை மீட்டல்: அமைச்சர் டக்ளஸுடன் ஹக்கீம் எம்.பி பேச்சு

அட்டாளைச்சேனையிலிருந்தும்,வடக்கில் பருத்தித்துறையில் இருந்தும் கடலுக்குச் சென்று காணாமல் போன மீனவர் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். நேற்று முன்தினம் மாலை, கொழும்பில் இக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. பம்பலப்பிட்டியிலுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை, கப்பலடி மீனவர் துறையிலிருந்து கடந்த மாதம் 12 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற ஐ.எல். அகமது 06

# பங்களாதேஷில் இடைக்கால அரசை அமைக்க இணக்கம்

### முஹம்மது யூனுஸ் தலைமை ஆலோசகர்



பங்களாதேஷில் அமைக்கப்படவுள்ள இடைக்கால அரசாங்கத்தில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முஹம்மது யூனுஸ், தலைமை ஆலோசகராக இருப்பாரென அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் 06

# தமிழக மீனவர்களை விடுவிக்க கனிமொழி வலியுறுத்தல்



இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற குழுத் தலைவியான கனிமொழி கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இந்திய மக்களவையில் இது தொடர்பில் நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த அவர், இந்த ஆண்டில் மாத்திரம் தமிழக மீனவர்களின் 06

# இலங்கை - இந்திய கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

### காங்கேசன்துறை வரை, இன்று பரீட்சார்த்தப் பயணம்



காங்கேசன்துறை, நாகபட்டினத்துக்கிடையிலான கப்பல் சேவை அடுத்த வாரம் முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகபட்டினம், காங்கேசன்துறைக்கிடையே கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை பல முறை 06

# கல்பிட்டி களப்புக்குள்ளிருந்து 04 கிலோ தங்க கட்டிகள் மீட்பு

### ரூபா. 11 கோடி 51 இலட்சம் பெறுமதியென மதிப்பீடு



கல்பிட்டி தோராயடி களப்பில் நாலு கிலோ தங்கக்கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன. விஷேட தேடுதல் நடத்திய கடற்படையினர் இவற்றை மீட்டனர். இவற்றின் பெறுமதி ரூ. 11 கோடி 51 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் களப்புக்குள் இவற்றை கடத்தல்காரர்கள் வீசியிருக்கலாமெனத் தெரிய வருகிறது. பொதியொன்றில் இந்தத் தங்கக்கட்டிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

தங்கப்பொதியை கொண்டு சென்றதாக சந்தேகிக்கப்படும் கண்ணாடி இழை படகொன்றையும் தோராயடி 06



# பிரதேச ஊடகவியலாளர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

பிரதேச ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளையும் முறைப்பாடுகளையும் முன்வைப்பதற்கு ஊடக ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்து, அவர்களின் சேவை ஒப்பந்தம் தொடர்பில் ஆராயும் அதிகாரத்தை ஆணைக்குழுவிற்கு வழங்குவது குறித்து எதிர் வரும் புதிய பாராளுமன்றத்தின் கீழ் கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரதேச ஊடகவியலாளர்களைப் பாராட்டும் முகமாக 'நாடளாவிய பிரதேச ஊடகவியலாளர்கள் அமைப்பு' பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் (06) ஏற்பாடு செய்திருந்த 'கௌரவர்த்த ஹரசர' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதன்போது பிரதேச ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய பிரேரணை ஒன்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு பொறுப்பான கட்சிகளை உள்ளடக்கிய புதிய அரசியல் முறைமையொன்று நாட்டில் கட்டமைக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேர்தலை ஒத்திவைக்க தாம் ஒருபோதும் விரும்பவில்லை எனவும் ஜனாதிபதித் தேர்தலின் போது, நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பொறுப்பு மக்களுக்கே வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

**இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம–சிங்க மேலும் தெரிவித்ததாவது:**

"பிரதேச ஊடகவியலாளர்கள் இன்று தமது பரிந்துரைகளை முன்வைத்தனர். தமது பிரச்சினைகளை முன்வைக்க அவர்களுக்கு சட்ட வாய்ப்பு இல்லை எனவும் கூறினர். பிரதேச பத்திரிகையாளர்கள் தமது பிரச்சினைகளையும் முறைப்பாடுகளையும் தெரிவிப்பதற்கான ஒரு இடம் தேவை.

பத்திரிகைச் சபைக்குப் பதிலாக ஊடக ஆணைக்குழுவை நிறுவுவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பிராந்திய ஊடகவியலாளர்கள் சேவை ஒப்பந்தத்தில் இல்லை. மாறாக பொது ஒப்பந்தத்திலேயே உள்ளனர். எனவே பிரதேச ஊடகவியலாளர்களின் முறைப்பாடுகளை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அடுத்த பாராளுமன்றத்தில் அது குறித்து கவனம் செலுத்துவோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்ற போது, நாடு எதிர்நோக்கும் நெருக்கடி இரண்டு வருடங்களுக்குள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அந்தக் கடமையை நிறைவேற்றி விட்டேன். இன்று நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீட்கப்பட்டு முன்னோக்கி கொண்டு வரப்பட்டுள்ளது.

அதன் அடுத்த கட்டம் எவ்வாறானது? ஒரு நாடாக நாம் முன்னேறுவதா அல்லது மீண்டும் வீழ்ச்சியடைவதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து உடன்பாடுகளை எட்டியுள்ளோம். அந்த நிபந்தனைகளை யாராலும் நீக்க முடியாது. அந்த நிபந்தனைகளை மாற்றினால், சர்வதேச நாணய நிதியம் அதிலிருந்து விலகும். அதனால் நம் நாட்டுக்கு கிடைக்கும் பணத்தை இழக்க நேரிடும். எனவே எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். அந்த முடிவை நாட்டு மக்களிடமே விட்டுவிட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

நான் ஒருபோதும் தேர்தலை ஒத்திவைக்க விரும்பவில்லை. தேர்தலை ஒத்திவைக்கப் போவதாக சிலர் கூச்சலிட்டனர். ஜனாதிபதிப் பதவியையும் பிரதமர் பதவியையும் கொடுக்க முற்பட்ட போது, சிலர் ஓடி மறைந்துகொண்டனர். நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்றனர். இவ்வாறானவர்கள் தேர்தலுக்குப் பின்னர் தங்களால் நாட்டை நடத்த முடியாது என்று சொன்னால் நிலைமை என்னவாகும்?

இன்று நாட்டின் அரசியல் அமைப்பு சீர்குலைந்துள்ளது. பொருளாதாரம் சரிந்தபோது, அரசியல் முறையும் சீர்கு லைந்துள்ளது. சோவியத் பொ ருளாதாரம் சீர்குலைந்த போது, அரசியல் முறையும் சீர்கு லைந்தது. அதன் பிறகு சோ வி யத் ஒன்றியமும் உடைந்த து . சீனா எமக்கு முன்னதாக பொருளாதார சீர்திருத்தங்களை கொண்டு வந்தது. எந்த ஒரு நாட்டினதும் பொருளாதார முறைமை சரிந்தால் , அரசியல் முறையும் சரியும். ஏனெனில் பொருளாதார முறையும் அர சி யல் முறையும் ஒன்றோடு ஒன்று இணைந்தே செல்கின்றன.

ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு சீர்குலைந்தால், அதை மீண்டும் ஒன்றாக இணைப்பது எளிதல்ல. நமது அரசியல் அமைப்பு சீர்குலைந்துள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இன்று, பொதுஜன பெரமுனவில் பெரும்பாலானவர்கள் என்னுடன் உள்ளனர் மற்றும் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் உள்ளனர்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருக்குப் பதிலாக பொதுஜன பெரமுனவின் வேட்பாளருக்கு ஐக்கிய மக்கள் சக்தி வாக்களித்தது. தமிழ்க் கட்சிகள் பிளவுபட்டுள்ளன. அதனால் நாட்டில் சரியான அரசியல் கட்சி முறைமையொன்று இல்லையென்பது தெரிகிறது.





## ஒருபோதும் தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பொறுப்பு மக்களிடம் ஒப்படைக்கப்படும்

சிவில் சமூகத்துடன் செல்வதா அல்லது பழைய ஜே.வி.பி முறைமையில் செல்வதா என்பதை தீர்மானிக்க முடியாமல் ஜே.வி.பி இன்று பிளவுபட்டுள்ளது.

இன்று ஜே.வி.பியில் லெனினும் இல்லை, ஸ்டாலினும் இல்லை, விஜேவீர மட்டுமே எஞ்சியுள்ளார். விஜேவீர இல்லாமல் லெனினும் ஸ்டாலினும் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன். குறைந்தபட்சம் மார்க்ஸ் இருந்தாலும் ஏற்புடையதாக இருக்கும். இன்று மார்க்ஸ், லெனினை நீக்கிவிட்டு விஜேவீரவை இறக்கியுள்ளனர். இப்படியாகத்தான் இன்று அரசியல் முறைமை முன்னோக்கிச் செல்கிறது.

நாட்டின் பொருளாதாரத்தை சீராக முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு பொறுப்பான கட்சிகளை உள்ளடக்கிய புதிய அரசியல் முறையொன்று உருவாக்கப்பட வேண்டும். அதனால்தான் ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடத் தீர்மானித்தேன். இந்த நாட்டை காப்பாற்ற முடியும் என்று நான் நம்பியதாலேயே தனியாக முன்வந்து ஆட்சியமைத்தேன். எந்த நாட்டிலும் ஒரு ஆசனத்தை பெற்ற கட்சி ஆட்சி அமைத்ததில்லை. எனவே நான் செய்திருப்பது கின்னஸ் சாதனையாகும். புதிய அரசியல் முறைமையின்றி நாடு முன்னேற முடியாது.

கடந்த காலங்களில் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. கடந்த ஒன்றரை வருடங்களில் அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்ட பணத்தை மட்டுப்படுத்தினோம். தற்போது இந்த நாட்டின் பொருளாதாரம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. அதனால் படிப்படியாக மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிகிறது. நெருக்கடியால் மக்கள் அவதிப்பட்டனர். இன்னும் பிரச்சினைகள் உள்ளன. அதிலிருந்து மக்கள் விடுபட வேண்டும். எனவே புதிய சிந்தனையுடன் புதிய கட்சி முறைமையின் கீழ் புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்".

**தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்ததாவது:**

"ஊடகவியலாளர்கள் இந்நாட்டின் வளர்ச்சிக்கு பெரும்பணி ஆற்றுகின்றனர். ஆனால் கடந்த காலத்தில் இந்த நாடு எதிர்கொண்ட நிலைமையை நீங்கள் அறிவீர்கள். இன்று பங்களாதேஷில் தொடர் நிகழ்வுகளை நாம் பார்க்கிறோம். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இலங்கையில் அந்தப் போராட்டத்தை ஒரு துப்பாக்கியையும் பயன்படுத்தாமல் கட்டுப்படுத்த முடிந்தது. அன்று மக்கள் வாழ்வதற்கு எரிபொருள், எரிவாயு மற்றும் மருந்துகள் கேட்டனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கப் பாடுபட்டார்.

உங்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கென புதிய சட்ட மூலம் தயாரிக்கப்படுகிறது. உங்கள் தொழில் கண்ணியம் மற்றும் உரிமைகளை வழங்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்காலத்தில் உங்களுக்கு காப்புறுதியை வழங்க 100 மில்லியன் ரூபாவை ஒதுக்க திட்டமிட்டுள்ளோம். பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஒரு பிராந்திய ஊடகவியலாளர் ஒரு நிறுவனத்திலிருந்து நீக்கப்பட்டால், அவர்களுக்கு 3 மாத காலத்திற்கு இழப்பீடு வழங்கப்படும். இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமா அதிபருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தின் ஊடாகவும் ஊடகவியலாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது".

**ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார:**

"ஊடகவியலாளர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தமது பணியை மேற்கொண்டு வருகின்றனர். இந்நாட்டில் உள்ள அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களும் உங்களின் உழைப்பில் தங்கியுள்ளன.

ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் திட்டம் எதுவும் கிடையாது. அடுத்த வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்படும் போது ஊடகவியலாளர்களுக்கு காப்புறுதி வழங்க 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பார். அத்துடன் ஊடகவியலாளர்களுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்காலத்தில் பணம் ஒதுக்கப்படும்".

அண்மைக் காலமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக ஊடகவியலாளர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க முடியவில்லை. அன்றைக்கு எந்தத் தலைவரும் நாட்டைக் கைப்பற்ற முன்வரவில்லை. இன்றைய பங்களாதேஷின் நிலைமையை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அன்று ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் ஜனாதிபதியாக நியமிக்கப்படாமல் இருந்திருந்தால் இன்று இந்த நாடு ஒரு இராணுவத் தளபதியின் கீழ் ஆளப்படும் நிலை ஏற்பட்டிருக்கும்.

பொருளாதார பரிமாற்றச் சட்டம், ஊடகம் தொடர்பான சட்டங்கள் அறிமுகம் செய்கையில் சிலர் அதனை பிசாசாக காட்ட முயன்றனர். ஆனால் அவை இன்று புஸ்வானமாகிவிட்டன. எதிர்காலத்தில் ஊடகவியலாளர்களின் தொழிற்துறையை பாதுகாக்க அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது".

அமைச்சர் காஞ்சன விஜேசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, பிரேமநாத் சி.தொலவத்த, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம்(06) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் பிரகாரம் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, துறைமுக நகர், மத்திய வங்கி, பாராளுமன்றம் உள்ளிட்ட கொழும்பை சூழவுள்ள கல்வி முக்கியத்துவம் வாய்ந்த விசேட இடங்களை பார்வையிடும் வாய்ப்பு பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

அதற்கமைய இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்கள் 280 பேர் களப்பயணத்தில் இணைந்து கொண்டதுடன், அவர்கள் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற பின்னர், ஜனாதிபதி அலுவலகத்துக்கு வருகை தந்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்குமாறு அவர்கள் கோரியுள்ளனர். ஜனாதிபதி தனது வேலைப்பளுவைப் பொருட்படுத்தாமல் பல்கலைக்கழக மாணவர்களைச் சந்தித்ததுடன், அவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

அவர்களின் கல்விச் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை தொடர்பில் மாணவர்கள் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளித்ததுடன், அவர்களை தெளிவுபடுத்தவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களுடன் ஜனாதிபதி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் பிம்பா திலகரத்ன, ஜனாதிபதி செயலக உதவிப் பணிப்பாளர் மேஜர் நதீக தங்கொல்ல ஆகியோரும் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டனர்.



ஹர்ஷ டி சில்வா எம்.பி கூறுவது போல்

# IMF உடன்படிக்கை இரத்து செய்தால் 2025 பட்ஜட்டை சமர்ப்பிக்க முடியாது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா எம்.பி தெரிவிப்பது போல, சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை இரத்து செய்தால் 2025பட்ஜட் திட்டத்தைக் கூட முன்வைக்க முடியாது போகுமென போக்குவரத்து, ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். சர்வ



தேச நாணய நிதியத்தின் உடன்பாட்டில் சிறிதளவு மாற்றங்களை ஏற்படுத்தினாலும், நாட்டை முன்னெடுத்து செல்ல முடியாத நிலையே உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

06

மட்டு.மாணவி துஷ்பிரயோகம்

## விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்

மட்டக்களப்பு தேசிய பாடசாலையொன்றின் மாணவியொருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

# 2025: பட்ஜட்டில் 1,00,000 கிலோ மீற்றர் வீதி அபிவிருத்திகள் பூர்த்தியாகும்

## கிராமங்கள்,நகரங்களை இணைக்கும் வீதிகள் விரைவில் அபிவிருத்தி

ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் இறுதிக்கட்டப் பணிகளை அடுத்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதியைப் பெற்று முழுமையாக பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப் படுவதாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும், அவர்களுக்கு அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்,

“மிக மோசமான நிலைக்குச் சென்ற எமது நாடு தற்போது மெல்ல, மெல்ல வளர்ந்து வருகின்றது.

06






யாழ். நகருக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர் விஜேயதாஸ ராஜபக்ச,நேற்று (07) பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.கோண்டாவில் பகுதியில் BCS மண்டபத்தில் நடைபெற்ற ஜனாதிபதி வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டபோது பிடிக்கப்பட்ட படம்.

(படம் பருத்தித்துறை விசேட ,யாழ். விசேட நிருபர்கள்)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேக்கர, ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கும் உடன்படிக்கையில் கைவெழுத்திட்டார். இந்த நிகழ்வு கொழும்பு பத்தரமுல்ல, வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்றது.

( படம் – துஷ்மந்த மாயாதுன்ன)


## தென் மாகாண கல்வியமைச்சு

### தென் மாகாண சபை சிங்கள, தமிழ் மொழிமூல பாடசாலைகளில் காணப்படும் ஆங்கில பாட ஆசிரியர் வெற்றிடத்திற்காக பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளைச் சேர்த்துக் கொள்ளல் திருத்தப்பட்ட அறிவித்தல் – 2024

தென் மாகாண கல்வியமைச்சின் கீழ் உள்ள சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூல பாடசாலைகளில் ஆங்கில ஆசியர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஆசியர்சேவை யாப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக் கொள்வதற்காக பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல் முடிவுத் திகதி 2024.08.10 வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பதாரிகளின் வயதெல்லை 40 வயதிற்கு மேற்படாதவாறு திருத்தப்படுகிறது.

மேலதிக விபரங்களை www.edmin.sp.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**ரஞ்சித் யாப்பா,**
**செயலாளர்,**
**தென் மாகாண**
**கல்வியமைச்சு,**
**தக்ஷினபாய, லபுதுவ**



## கேள்வி அறிவித்தல்
## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

**கணனிகள் மற்றும் கணனிகளின் துணைப்பொருட்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு**
**SMIB/TD/2024/08/02**

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி மற்றும் அதனது கிளைகளின் கணனிகள் மற்றும் கணனிகளின் துணைப்பொருட்களின் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பிற்காக சொந்தமான கிளை வலைப்பின்னல் மற்றும் தகைமையுள்ள தொழில்நுட்ப ஆளணியினரைக் கொண்டுள்ள வங்கித்துறை மற்றும் நிதித் துறையில் ஆகக் குறைந்தது மூன்று (3) வருட நிறுவுதல் மற்றும் வன்பொருள் மற்றும் கணனிகளின் துணைப்பொருட்களில் அனுபவத்தையுடைய இலங்கையிலுள்ள புகழ்வாய்ந்த மற்றும் பதிவு பெற்ற சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விக்கோரல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

ஆர்வமும் தகுதியுமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 5000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொழும்பு-03, காலி வீதி, 269 ஆம் இலக்கத்திலுள்ள அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 4 ஆம் மாடியின் மனித வளங்கள் மற்றும் லொஜிஸ்டிக்கிற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இருப்பினும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அமைவிடத்தில் கேள்விக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

| கேள்விக்கோரல் சமர்ப்பித்தலின் மூடும் திகதி மற்றும் நேரம் | 2024 ஓகஸ்ட் 22 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
|---|---|
| கேள்விப்பிணைத் தொகை | 50,000 இலங்கை ரூபா |

காரணமொன்றை வழங்காமல் எந்தவொரு அல்லது கேள்விக்கோரல்களையும் நிராகரிப்பதற்கும் கேள்விக்கோரலொன்றின் பகுதியொன்றை ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையானது வங்கி வசமானது.

மேலதிக தகவலுக்காக 011-7722879/011-7722876 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**கொள்வனவுக் குழு,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல.: 269, காலி வீதி, கொழும்பு - 03.**



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்

## கேள்விகளுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

| | வேலையின் பெயர் | மதிப்பீட்டுச் செலவு (ரூபா மில்லியன்) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | CIDA தரம் | கேள்விப் பிணை முறி | | கேள்விகளின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி | செல்லுபடிக் காலம் | | |
| 1. | அம்பாறை நீதிமன்றக் கட்டிடத்தொகுதிக்கு மின்சார பெனல்கள் (பிரதான பெனல்கள் மற்றும் உப பெனல்கள்) சகிதம் தேவையான மின்சார வேலைகள் (**BD-0046sp02-Z4/CT051/24)** | 12.1 | 49 | மின்சார நிறுவல்களில் EM 3 அல்லது அதற்கு மேல் (குறைந்த மின்னழுத்தம்) (El-LV) | 180,000.00 | 2024-12-04 வரை | 77 | 4,000.00 |
| 2. | திருகோணமலை, கோணேசபுரி, ஆயுர்வேத திணைக்கள, சித்த போதனா வைத்தியசாலையில் உள்ள வெளி நோயாளர் பிரிவின் கூரை மற்றும் மலசலகூடத் தொகுதிகளின் புதுப்பித்தல் வேலைகள் (**BD-0055sp01-Z4/CT020/24)** | 11.5 | 119 | C6 அல்லது C5 | 170,000.00 | 2024-12-04 வரை | 77 | 4,000.00 |

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும். 1ஆம் திட்டம் தவிர.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாணத் துறைக்காக மேலே அட்டவணையிலுள்ள தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   ‘‘பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். *PCA 03* பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்படமாட்டாது’’
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மட்டக்களப்பு, திராய்மடு, பனிச்சயடி, கட்டிடங்கள் திணைக்களம் வலயம் 1, பிரதம பொறியியலாளர் (வலயம் 4) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 065-2229808 தொலைநகல்: 065-2229807
5. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2024-08-08ஆம் திகதி முதல் 2024-08-21ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மட்டக்களப்பு, திராய்மடு, பனிச்சயடி, கட்டிடங்கள் திணைக்களம் வலயம் 1, பிரதம பொறியிலாளருக்கு (வலயம் 4) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2024-08-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்ல, செத்சிறிபாய, 2ம் மாடி, கட்டிடங்கள் திணைக்களத்தின் ஒப்பந்தக் கிளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது ஏதேனும் நீடிக்கப்பட்ட காலத்திற்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு
   * மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்திற்கு
   * கேள்வித் தரவின் 16.2ம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைகூறல் முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்துக்குக் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரே பாதுகாப்புச் சோதனைகளின் நிமித்தம் ‘‘செத்சிறிபாய’’ வளவுக்குள் வந்துவிடுமாறு விலைகூறுநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பொறி. (திருமதி) K.G.S. குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ‘‘செத்சிறிபாய”, பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**



hela

## HELA APPAREL HOLDINGS PLC
## (பதிவு இல. :PQ 00205151) இன்
## சிறப்பு பொது ஒன்றுகூடல் தொடர்பான அறிவித்தல்

Hela Apparel Holdings PLC இன் (“கம்பனி”) பங்குதாரர்களுக்கான சிறப்பு பொது ஒன்றுகூடல் 2024 ஆகஸ்ட் இருபத்தாறாம் 26 திகதி, பி.ப. 3.00 மணிக்கு ஒன்லைன் ஓடியோ-வீடியோ சந்திப்பாக நடைபெறவுள்ளது என்பது தொடர்பில் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. இல. 35, பலபொக்குன வீதி, கொழும்பு 6 எனும் பதிவு செய்யப்பட்ட முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்திலிருந்து இந்த சந்திப்பு இயக்கப்படுவதுடன், இதன் போது முன்நூற்று பத்தொன்பது மில்லியன், மூன்நூற்று அறுபத்தைந்தாயிரம், இருநூற்று இருபத்து ஏழு (319,365,227) சாதாரண வாக்குரிமை பங்குகளுக்கான உரிமை வழங்கல் தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

சந்திப்பு பற்றிய அறிவித்தல், ப்ரொக்ஸி படிவம், பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை மற்றும் சிறப்பு ஒன்றுகூடலுக்கான பதிவு படிவம் ஆகியவற்றை (https://www.helaclothing.com/) எனும் கம்பனி இணையத்தளத்திலிருந்தும், கொழும்பு பங்குப்பரிவர்த்தனை இணையத்தளமான (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=HELA.N0000) என்பதன் ‘அறிவித்தல்கள்’ எனும் தலைப்பு பகுதியிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். பதிவு மற்றும் மெய்நிகர் சிறப்பு பொது ஒன்றுகூடலில் பங்கேற்பது தொடர்பான அறிவுறுத்தல்களை மேற்படி இணையத்தளங்களிலிருந்து டவுன்லோட் செய்து கொள்ள முடியும். சந்திப்புக்காக குறிக்கப்பட்ட நேரத்துக்கு ஆகக்குறைந்தது 48 மணி நேரத்துக்கு முன்னதாக பூர்த்தி செய்யப்பட்ட பதிவு படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பங்குதாரர்கள் ஏதேனும் மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு, Adam Collins (பொது முகாமையாளர், கூட்டாண்மை விவகாரங்கள் மற்றும் முதலீட்டாளர் உறவுகள்) உடன் வேலை நாட்களில் +94 77 026 2316 ஊடாக அல்லது hela_agm@helaclothing.com எனும் மின்னஞ்சல் வாயிலாக தொடர்பு கொள்ளவும்.

சிறப்பு பொது ஒன்றுகூடலில் பங்கேற்று வாக்களிக்க தகுதி பெறும் பங்குதாரர், தமக்கு பதிலாக நிகழ்வில் பங்கேற்று வாக்களிப்பதற்கு பங்குதாரர் அல்லாத பிரிதொரு நபரை நியமிக்கும் உரிமையை கொண்டுள்ளார். அதற்கான ப்ரொக்ஸி படிவத்தை மேற்படி இணையத்தளங்களிலிருந்து டவுன்லோட் செய்து கொள்ளலாம்.

பணிப்பாளர் சபை ஆணையின் பிரகாரம்
HELA APPAREL HOLDINGS PLC

ஒப்பமிட்டவர்
(Ms) ஜே குகநேசன்
கம்பனி செயலாளர்

08 ஆகஸ்ட் 2024

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 23ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 03

## குறள் தரும் சிந்தனை



ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

ஒழுக்கம் உடையவராக வாழ்வதுதான் உயர்ந்த குடிப்பிறப்புக்கு எடுத்துக் காட்டாகும். ஒழுக்கம் தவறுகிறவர்கள் யாராயினும் அவர்கள் இழிந்த குடியில் பிறந்தவர்களாகவே கருதப்படுவர்.

# நடைமுறைச் சாத்தியமற்ற போலியான வாக்குறுதிகள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு ஏற்கப்படுவதற்கான திகதியும் தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் களம் நாளுக்கு நாள் சூடுபிடித்து வருகின்றது. இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று வரையும் சுமார் 14 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேநேரம் முன்னதாகவே தேர்தல் பிரசாரம் தொடங்கி விட்டதாகவே தெரிகிறது. இப்பின்புலத்தில் அபேட்சகர்களும் அவர்கள் சார்ந்த கட்சிகளும் அக்கட்சிகளின் பிரதிநிதிகளும் தேர்தல் கால வாக்குறுதிகளை வழங்கும் நிலைமை ஆரம்பமாகியுள்ளது. குறிப்பாக எதிரணிக் கட்சிகள் வாக்குறுதிகளை அள்ளி வீசக்கூடியனவாக உள்ளன. அவற்றில் பெரும்பாலான வாக்குறுதிகள் தேர்தல் முடிவடைந்ததோடு காற்றில் பறந்து விடக்கூடியவை. அநேக வாக்குறுதிகள் நடைமுறைச் சாத்தியமற்றவை. இது பரவலாக அறியப்பட்ட உண்மை.

கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாடு, பாரிய சவால்களுக்கு முகம்கொடுத்தபடியே கட்டம் கட்டமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மீளக்கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. அதன் ஊடாக பொருளாதாரம் நம்பிக்கை அளிக்கும் வகையில் முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. பொருளாதார நெருக்கடி காலகட்டத்தில் நாடும் மக்களும் முகம்கொடுத்த அசௌகரியங்களும் பாதிப்புக்களும் நீங்கியுள்ளமை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஆனால் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகியிருந்த போது நாட்டின் தலைமையை ஏற்று பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப முன்வராத எதிரணியினர், மக்கள் அன்றைய பொருளாதார நெருக்கடியில் நசுங்குண்டிருந்தை நேரில் கண்டு கூட மக்களின் நலன்களுக்காக தீர்மானங்களை எடுக்கத் தவறியவர்களாவர். இதனை மக்கள் மறந்தவர்கள் அல்லர்.

அன்று மக்களின் நல்களுக்காக தீர்மானங்களை எடுக்க முன்வராதவர்கள்தான் தற்போதைய ஜனாதிபதி தேர்தலில் அபேட்சகர்களாகக் குதித்துள்ளனர். இந்த தேர்தல் காலத்தைப் பயன்படுத்தி இவர்கள் வழங்கிவரும் வாக்குறுதிகள் உண்மையாகவே நடைமுறைப்படுத்தப்படுமாயின் நாட்டையே ஆசியாவின் அதிசயமாக மாற்றிவிடலாம் என்பது தான் சமூகநல ஆர்வலர்களின் கருத்தாகும்.

அந்த வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தங்கள் கட்சி அபேட்சகர் ஆட்சிக்கு வந்தால், பெற்றோல் நிவாரணம் வழங்கும் திட்டம் குறித்து குறிப்பிட்டிருந்தார். அவரது உரையில், உதாரணமாக ஒரு லீற்றர் பெற்றோல் ரூ. 400.00 விற்கப்படுகிறது. இதனால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு கோடிக்கணக்கில் இலாபம் கிடைக்கிறது. அடுத்த குழுவினர் நாம் பெற்றோலை ரூ 200.00 வழங்குவோம் என்கின்றனர். ஆனால் நாம் அப்படி கூறவில்லை. பெற்றோல் லீற்றருக்கு ரூ. 400.00 படி விற்கப்படுகின்ற போதிலும் ரூ. 200.00 வுக்கு விற்கப்பட வேண்டிய வரிடம் பெற்றோல் நிலையத்தில் ரூ 400.00 அறவிடப்பட்டாலும் டிஜிட்டல் தொழில்நுட்ப முறைமையில் ரூ 200.00 வை உடனடியாக அவருக்கு வங்கி கணக்கின் ஊடாக திருப்பி வழங்குவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின் நடைமுறைச் சாத்தியம் குறித்து கேள்விகள் எழுந்துள்ளன. ஏனெனில் இந்நாட்டின் பெரும்பகுதியினர் இன்னும் டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்குள் பிரவேசிக்காதவர்களாக உள்ளனர். நகர்ப்புறங்கள் தவிர்ந்த தூரப்பிரதேசங்களில் டிஜிட்டல் தொழில்நுட்ப பயன்பாடும் இத்தகைய திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அளவுக்கு இன்னும் வளர்ச்சி அடைந்தாக இல்லை. அத்தோடு டிஜிட்டல் தொழில்நுட்பம் குறித்த அறிவை அனேகர் பெற்றவர்களாகவும் இல்லை. அது மாத்திரமல்லாமல் வங்கிக் கணக்கு இல்லாதவர்கள் கூட இன்னும் நாட்டில் இருக்கவே செய்கின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்கையில் இது நடைமுறைச் சாத்தியமற்ற திட்டம். இது தேர்தல் காலம். அதனால் தங்களது விருப்பங்களுக்கு ஏற்ப வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். தேர்தலின் பின்னர் வாக்குறுதிகளை வழங்கியவர்களுக்கு வாக்குறுதிகள் கூட நினைவிருக்காது என்பதுதான் மக்களின் கருத்தாக உள்ளது.

கடந்த பொருளாதார வீழ்ச்சிக் காலத்தில் அனுபவித்த கஷ்டங்களையும் துன்பங்களையும் மக்கள் இன்னும் மறந்து விடவில்லை. அந்த நெருக்கடியான சூழலில் கட்சியினதோ தமதோ நலன்களைக் கருத்தில் கொள்ளாது நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து தீர்மானங்களை எடுத்து செயற்பட்டவர் யார் என்பதையும் மக்கள் அறிவர். அந்த பொருளாதார வீழ்ச்சியின் அதள பாதாளத்தில் வீழ்ந்திருந்த மக்களை பாரிய சவால்களுக்கு முகம்கொடுத்து மீட்டெடுத்த பெருமை ஜனாதிபதிக்குரியது என்பதையும் மக்கள் மறந்துவிடல்லை.

அதனால் என்னதான் நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கினாலும் அவ்வாக்குறுதிகளை நம்ப மக்கள் தயாரில்லை என்பது தெளிவானது.

editor.tkn@lakehouse.lk

# ஷேக் ஹசீனாவை திருப்பி அனுப்புமாறு பங்களாதேஷிலிருந்து இந்தியாவுக்கு செய்தி!

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் அவரது சகோதரி ஷேக் ரெஹானா ஆகியோரைக் கைது செய்து பங்களாதேஷுக்கு திருப்பி அனுப்புமாறு வங்கதேசத்தில் இருந்து இந்தியாவிற்கு தகவல் வந்துள்ளது.

இது தொடர்பாக பங்களாதேஷ் உச்சநீதிமன்ற வழக்கறிஞர் சங்கத்தின் (SCBA) தலைவர் Mahbub Uddin Khokon, இந்தியாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார். செய்தியாளர் கூட்டத்தில் பேசிய கோகோன், "வங்கதேசத்தில் நடந்ததாகக் கூறப்படும் மரணங்களுக்கு ஹசீனா பொறுப்பேற்க வேண்டும். இந்தியாவுடன் நேர்மறையான உறவைப் பேணுவது முக்கியம். இந்த உறவு உடையாமல் இருக்க ஹசீனாவை இந்தியாவில் இருந்து உடனே வங்கதேசத்திற்கு அனுப்ப வேண்டும். அவரை இந்தியா திரும்பி அனுப்பவில்லை என்றால் நம் உறவு கெடும் வாய்ப்புகள் உள்ளன" என்று வலியுறுத்தியுள்ளார்.



பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் (BNP) இணைச் செயலாளராகவும் பணியாற்றும் கோகோன் அந்நாட்டின் வலிமையான தலைவர்களில் ஒருவர். அப்படி இருக்க அவரே இந்தியாவிற்கு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வங்கதேசம் இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடு. சீனா அருகிலேயே இருந்தாலும், அமெரிக்கா பல கோடிகளை முதலீடு செய்யத் தயாராக இருந்தாலும் கூட அவர்களின் அரசியலை வங்கதேசம் உள்ளே விட்டது இல்லை. காரணம் ஹசீனா இந்தியாவுடன் வைத்து இருக்கும் நெருக்கம்.

இந்தியாவின் ஆட்சியாளர்களுடன் அவர் தொடர்ந்து கடைப்பிடிக்கும் நெருக்கம் இந்தியாவிற்குஉறுதுணையாக இருந்தது.

ஏனென்றால் பாகிஸ்தான் இந்தியாவின் நட்பு நாடு இல்லை. அதேபோல் ஆப்கானிஸ்தான் இந்தியாவின் நட்பு நாடு இல்லை. அத்தோடு நேபாளம் இந்தியாவை எதிரியாகப் பார்க்கிறது. பூட்டான் அவ்வப்போது இந்தியாவிற்கு எதிரான கருத்துகளை, நிலைப்பாடுகளை எடுத்து வருகிறது. இப்படி இருக்க வங்கதேசத்தின் நட்பு இந்தியாவிற்கு தேவையாக இருந்தது. ஆனால் தற்போது இரண்டு நாட்டு உறவு உடையும் நிலை ஏற்பட்டு உள்ளது. ஷேக் ஹசீனா வெளியேற்றம் காரணமாக இந்தியா_ வங்கதேசம் உறவு இனி நீடிக்கும் வாய்ப்புகள் குறைவு. ஏனென்றால் இப்போது வங்கதேச அரசு உடைய காரணம் அமெரிக்கா செய்த வேலை அல்லது சீனா செய்த வேலை என்று கூறப்படுகிறது.

இரண்டில் ஒரு நாடு பாகிஸ்தான் மூலமாக வங்கதேச ஆட்சியை கவிழ்த்து உள்ளது. இதை இந்தியா கணிக்க தவறிவிட்டது. இல்லையென்றால் இந்தியா இந்த விவகாரத்தில் துரிதமாக செயல்பட தவறிவிட்டது என்று அரசியல் நோக்கர்களால் புகார்கள் வைக்கப்படுகின்றன.

**(இந்திய இணையத்தளம்)**



# இராஜதந்திரிகளுக்கான சிறப்பு கற்கைநெறி

இலங்கையிலிருந்து சென்று பணிபுரிகின்ற இராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகளுக்கான சிறப்பு கற்கைநெறி பாடத்திட்டத்தை SSIFS பீடாதிபதி சஞ்சீவ் ரஞ்சன் அண்மையில் SSIFS MEA இல் ஆரம்பித்து வைத்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மற்றும் அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

# முருகன் படைவீடு கொண்ட திருப்பதிகளுள் மூன்றாவது படைவீடான திருவாவினன்குடி

முருகன் படை வீடு கொண்ட திருப்பதிகளுள் திருவாவினன்குடி என்னும் திருத்தலம் மூன்றாவது படைவீடாக அமைந்துள்ளது. பரங்குன்றத்தில் கல்மலையில் கற்கோயிலமைத்துக் கல்லால் தெய்வமாகக் காட்சி தந்த செந்தமிழ் முருகன் இத்திருத்தலத்தில் சற்று வித்தியாசமாகக் காட்சி தருகிறான். இத்திருத்தலம் சங்க இலக்கியங்களில் பொதினி என வழங்கப் படுகிறது. பொதினி என்பது பொதிந்தது எனப் பொருள்படும். மேலும் இத்திருத்தலத்திற்கு 'சித்தன் வாழ்வு' என்று ஒரு பெயர் உண்டு. சித்தன் வாழ்வு இல்லந்தோறும் மூன்றெரியுடைத்து என்று பாராட்டுகிறார் அருந்தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியார்.

மெய்ஞ்ஞானத்தை அள்ளி வழங்குகின்ற தத்துவ நாயகனாக விளங்குகின்ற பழநியாண்டி, திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திகழும் இத்திருத்தலத்தில் பழநிமலை இடும்பன் மலை என இரண்டு மலைகள் அருகருகே அமைந்துள்ளன. அவ்விருமலைகளும் கடல்மட்டத்திற்கு மேல் 1068 அடிகள் 320 மீட்டர் உயரத்தில் உள்ளன. பழநி மலையின் உச்சியில் மணி முடிபோலே ஞான பண்டிதனின் திருக்கோயில் திருக்காட்சி தருகின்றது. இக்குன்றின் உயரம் 45 அடி. இதனை அடுத்து தான் இடும்பன் மலை அமைந்துள்ளது. இதனையடுத்து இடும்பன் குளம் உள்ளது.



சரவணப் பொய்கையும் சண்முக நதியும் இத்தலத்தின் புண்ணிய தீர்த்தங்கள். சரவணப் பொய்கையில் நீராடியே ஞானப் பழத்தின் நாயகனைத் தரிசக்கச் செல்லுதல் வேண்டும் என்பது மரபு. இது ஒரு காலத்தில் நெல்லி வனமாக இருந்தது. இன்றும் நெல்லியே தலவிருட்சமாக உள்ளது.

சித்திரைத் திங்கள் திருவிழா வைகாசி விசாகம் தைப்பூசம், கந்த சஷ்டித் திருவிழா, திருக்கார்த்திகைப் பெருவிழா, பங்குனி உத்திரத் திருவிழா எனப் பல விழாக்கள் இத்தலத்து நாயகனுக்குண்டு. யோகியார், ஞானியார், சித்தர்கள், கவிஞர்கள், இசைப் பாடலாசிரியர்கள் என வகைவகையானோர் வாய் மணைக்கப் பாடி மகிழ்ந்த திருத்தலம் பழநி. திருமுருகன் பழநி மலையில் குடியேறிய செய்தி நாம் அறிந்ததே. சிவபெருமானுக்கு நாரதர் ஒரு மாம்பழத்தைத் தந்து ஓர் ஓரங்க நாடகத்தை நடத்திய புராணக் கதை நமக்குத் தெரிந்ததுதான். ஞானமார்க்கத்துக்கு வழிகாட்டும் ஞானப் புன்னகையுடன் ஞானமே வடிவாக நிற்கின்ற பெருமானது வரலாறு சுவையானது.



கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்
லண்டன்

# நடிகர், இயக்குனர், தயாரிப்பாளர் போன்ற சிகரங்கள் தொட்ட ரோனி எனும் கலைஞன்

நுவரெலியா மாவட்டத்தின் ராகலை பிரதேசத்தில் பிறந்து, வளர்ந்த ரோனி, பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து Graphic Designing, Network Engineering என IT துறையில் உயர்கல்வியைப் பெற்றுள்ளார்.

சிறு வயதில் இருந்த சினிமா ஆசையால் கைபேசியில் வீடியோக்களை எடுக்க ஆரம்பித்த இவரது பயணம் இன்று இலங்கையில் பெரிதும் பேசப்படுகிறது. அவர் பாராட்டப்பட்ட நடிகராகவும், இயக்குனராகவும் வளர்ச்சி பெற்றுள்ளார்.

5, 6 வருடங்களாக இத்துறையில் ஈடுபட்டுவரும் இவர் பல குறும்படங்களையும், காணொலிப் பாடல்களையும் உருவாக்கியுள்ளார். தனது எல்லா படைப்புகளிலும் எழுத்து, இயக்கம், தயாரிப்பு, படத்தொகுப்பு ஆகிய அனைத்தையும் அவரே செய்துள்ளார். இதன் மூலம் பல்முகக் கலைஞனாக உருவாகி உள்ளார். நாற்பதுக்கு மேற்பட்ட நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களை உருவாக்கி, அறிமுகப்படுத்தி உள்ளார்.

இலங்கை முழுவதும் நடத்தப்படும் விருது விழாக்களில் சிறந்த இயக்குனர், நடிகர், சாதனையாளர் என பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

You tube இல் தனது படைப்புகளை வெளியிட்டு வந்த இவர், கடந்த வருடம் தான் இயக்கி, நடித்த The Ruse End எனும் 30 நிமிட திரைப்படத்தை திரை அரங்குகளில் வெளியிட்டார். அது பெரும் வெற்றியை அடைந்தது. குறும்பட மொன்று இவ்வாறு கொண்டாடப்பட்டது வரலாற்று சாதனையாகும். மலையகத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அத்திரைப்படம் ராகலை திரைஅரங்கில் 2 நாட்கள் ஓடியது. 13 காட்சிகள் போடப்பட்டு, அனைத்தும் House full காட்சிகளாக அமைந்தன.

மக்கள் திரண்டு வந்து கொண்டாடி மகிழ்ந்தனர். தொடர்ந்து கொழும்பிலும் திரையிடப்பட்டு, அங்கும் நிறைந்த காட்சியாக அமைந்தது. விமர்சன ரீதியாகவும் இப்படம் வெற்றிப்படமானது.

சமூக அக்கறையுடன் படைப்புகளைத் தந்துள்ள இவர், பல ரசிகர்களைக் கொண்டு சிறந்த கலைஞன் என்பதைத் தாண்டி ஒரு நட்சத்திரமாக வளர்ந்துள்ளார். பல போராட்டங்களைக் கடந்து



தன்னம்பிக்கையுடன் கடினமாக உழைத்தால் சாதிக்கலாம் என்பதற்கு இவர் ஓர் உதாரணம். தான் வெற்றி பெற்றது மட்டுமின்றி, இலங்கைச் சினிமாவில் சாதிக்கத் துடிக்கும் அனைவருக்கும் நம்பிக்கையையும்,புதிய பாதையையும் உருவாக்கிக் கொடுத்துள்ளார். இவரது கலைப் பயணம் இன்னும் பல சிகரங்களை தொடும் என்பது உறுதி.

# சிறுவர் பிரச்சினைகளை அறிக்கையிடுவதில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்

## கிழக்கு ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு

சிறுவர்களின் பிரச்சினைகளை அறிக்கையிடும் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் தொடர்பான மூன்று நாள் பயிற்சி கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு நடைபெற்றது.

சிறுவர்களையும், சூழலையும் பாதுகாக்கும் அமைப்பினால் மட்டக்களப்பு



கல்லடி கிரீன் கார்டன் ஹோட்டலில் இடம்பெற்ற இச்செயலமர்வில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்து ஆண், பெண் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைகள் அறிக்கையிடுதல், சிறுவர் வன்முறைக்கு எதிராக புகாரளித்தல், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் ஆய்வு செய்தல் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் அறிக்கைகளையிடுகின்ற போது நெறிமுறை வழிகாட்டல்களையும், தரநிலைகளையும் பின்பற்றுகின்ற உயர்ந்த நிவுணத்துவத்தை உருவாக்குதல் போன்ற தலைப்புக்களில் மேற்படி





அமர்வு இடம்பெற்றது. எங்குமுள்ள சிறுவர்களையும், சூழலையும் பாதுகாக்கும் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.மஹ்ரூப், தெற்காசிய விமர்சன சிந்தனை முன்னேற்ற நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.சீ. றஸ்மீன், உலநல வைத்தியர் வைத்திய கலாநிதி சஹாய தர்ஷினி ஜேகுமார், திட்ட உத்தியோகத்தர் ஆர். நதியா, தொடர்பாடல் உதவியாளர் பி. கௌசல்யா உள்ளிட்ட பலர் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

எம்.எப். றிபாஸ்
(பாலமுனை தினகரன் நிருபர்)

# நகர்வலம்



அச்சுறுத்தல் நிலவும் நாடுகளிலுள்ள

## இலங்கையர்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்னோடி நடவடிக்கை

### வெளிவிவகார அமைச்சர் ஊடாக வேலைத் திட்டம் - சபையில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இஸ்ரேல் மற்றும் யுத்த அச்சுறுத்தல்கள் காணப்படும் நாடுகளிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோர் சம்பந்தப்பட்ட தரப்பினரை ஒன்றிணைத்து முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் (06) விசேட கூற்றொன்றை முன்வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தமது கேள்வியின் போது,

இஸ்ரேல் மற்றும் யுத்த அச்சுறுத்தல் நிலவும் நாடுகளிலுள்ள எமது நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

யுத்த சூழ்நிலையை கருத்திற் கொண்டு வெளிநாடுகளில் பணிபுரியும் தமது பிரஜைகளுக்கு இஸ்ரேல் விசேட துரித தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த வகையில் எமது நாட்டு பிரஜைகளும் பெருமளவில் இஸ்ரேலில் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் முறையான வேலைத் திட்டம் ஒன்றை அந்த நாடுகளில் உள்ள தூதரகங்கள் மூலம் முன்னெடுக்க வேண்டும். இஸ்ரேலில் மாத்திரமின்றி மத்திய கிழக்கு நாடுகளிலும் எமது மக்கள் பெருமளவில் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் அரசாங்கம் அந்த நாடுகளில் உள்ள தூதரகம் மற்றும் கொன்சியூலர் அலுவலகம் ஊடாக உரிய நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதிலளித்த போதே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, அரசாங்கம் அதற்கான முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்களை செயலமர்வுக்கு

## ஜனாதிபதி செயலகம் அழைக்கவில்லை; பணப்பரிசு வழங்கவும் இல்லை

### தொலவத்த எம்.பி சபையில் நிராகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பிரதேச ஊடகவியலாளர்களுக்காக நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட செயலமர்வுக்கு ஜனாதிபதி செயலகமே அழைப்பு விடுத்ததாக எதிர்க் கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாக ஆளும் கட்சி எம்.பி பிரேம்நாத் சி தொலவத்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.நேற்று முன்தினம் நடைபெற்ற அந்த செயலமர்வுக்கு தமது அலுவலகத்தின் ஊடாகவே அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரிவித்த அவர்,அங்கு அந்த ஊடகவியலாளர்களுக்கு பணம் வழங்கியதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டையும் தாம் முழுமையாக நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில் கௌரவத்திற்குரிய தொழிலில் ஈடுபடும் ஊடகவியலாளர்களை இவ்வாறு அடிமட்டத்தில் நோக்குவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலேயே தொலவத்த எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்திலுள்ள பிரதேச ஊடகவியலாளர்களை எமது அலுவலகத்தின் ஊடாகவே மேற்படி செயலமர்வுக்கு அழைத்தோம். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா அது தொடர்பில் தெரிவிக்கையில் அதில் கலந்து கொண்டவர்களுக்கு 5000 ரூபா பரிசாக வழங்கப்பட்டதாக குறிப்பிட்டார். அவரது அந்தக் கூற்று முற்றிலும் தவறானது. அதனைத் தாம் முற்றாக நிராகரிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்

## 42வருட அரசியல் அனுபவத்தினாலேயே இரு வருடத்தில் நாடு முன்னேறியது

### ஐ.தே.க தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி

**வெலிகம தினகரன் நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 42 வருட நீண்ட அரசியல் அனுபவத்தின் காரணமாகவே இரண்டு வருடங்களில் வீழ்ந்திருந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடிந்ததென ஐ.தே.கட்சி தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலியில் இடம்பெற்ற வைபவமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், சகலரும் ஒன்றிணைந்து முன்னேறினால் மாத்திரமே இந்த நாட்டு இளைஞர்களுக்கு எதிர்காலம் உண்டு.

இல்லையேல் பழைய நிலைக்கு நாடு செல்ல நேரிடும். பொதுவாக நாடு வீழ்ச்சியடைந்து செல்லும் போது, எதிர்கட்சிகள் நாட்டை பொறுப்பேற்க தயாராக இருக்க வேண்டும். இவ்வாறான நிலையில் தான் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். அதில் இன்று வரை வெற்றியும் கண்டுள்ளார். அவ்வாறான ஒரு தலைவர் தான் இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார்.



எமக்கு முன்னுள்ள இன்றைய தேவை நம் நாடு தான். கடந்த உள்நாட்டுப் யுத்தத்தின் போது இது பொது மக்களுக்கு புரிய வைக்கப்பட்டது.

அரசியல் கட்சிகள் என்ன சொல்கின்றன என்பது முக்கியமல்ல. அதனால் தான் ரணில் விக்கிரமசிங்க என்ற தேசிய தலைவர் சுயேச்சையாக இன்று போட்டியிடுகிறார்.இத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடையச் செய்து, நாட்டின் எதிர்காலத்தை சுபீட்சமாக மாற்றியமைக்க சகலரும் கட்சி பேதமின்றி வாக்களிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

## தொழில்கல்வி கற்கைகளை பூர்த்திசெய்த 175 பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

### பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் செஹான் பங்கேற்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் தொழிற்கல்வி கற்கை நெறிகளை பூர்த்தி செய்த வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 175 பயிலுனர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் அநுராதபுரம் இளைஞர் சேவை மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.தகவல் தொழில்நுட்பம், தாதியர் பயிற்சி, விவசாயம், தையல் போன்ற பாடப்பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கே இச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



தேசிய இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர் பொறியியலாளர் சமிந்த சுதர்சன லொக்குபண்டார, இளைஞர் சேவை மன்ற வட மத்திய மாகாண பணிப்பாளர் எம்.பி. குணரத்ன, அநுராதபுர மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.ஜே.ஆர். மதுரசிங்க, இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இங்கு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

## புதிய கோட்டக் கல்வி பணிப்பாளராக ஜவாத்

**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி கோட்ட கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய தீப்தி பெர்னாண்டோ பதவி உயர்வு பெற்று புத்தளம் வலயக் கல்விப் பணிமனைக்கு நியமனம் பெற்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு கற்பிட்டியைச் சேர்ந்த, புதிதாக கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட ஏ.எம். ஜவாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (06) தமது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.





மனித நேய மக்கள் கூட்டணியின் கட்சித்தலைவர்களுக்கான கூட்டம் அண்மையில் கொழும்பில் நடை பெற்றது. இதன் போது ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன், ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முஸ்னத் முபாறக் உட்பட கட்சி உறுப்பினர்கள் கலந்துரையாடலின் பின் எடுத்துக்கொண்ட படம்.

சீனன்கோட்டை மனாராத் ஏற்பாட்டில்

## 'அல் குர்ஆன் பெண்கள் பற்றி என்ன சொல்கிறது' விசேட நிகழ்வு

பேருவளை சீனன்கோட்டை மனாராத் மகளிர் அமைப்பினால் பெண்களுக்கான அல்குர்ஆன் ஒன்றுகூடல் நிகழ்வொன்று நாளை வெள்ளிக் கிழமை (09) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'அல்குர்ஆன் பெண்கள் பற்றி என்ன சொல்கிறது' என்ற கருப் பொருளில் நடைபெற இருக்கின்ற இந்நிகழ்வில் மனாராத் மகளிர் அமைப்பின் போசகரும் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) மற்றும் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அப்பாஸ் (நளீமி) ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு விரிவுரைகளை நிகழ்த்துவர்.

மனாராத் மகளிர் அமைப்பின் தலைவி பஸ்லா ஸினான் தலைமையில் பேருவளை ஸாரா வரவேற்பு மண்டபத்தில் பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளதோடு, சுமார் முன்னூறு பெண்கள் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## உலர்ந்த வாழையிலைகளை பயன்படுத்தி கைப்பணிப் பொருட்கள் – பாடநெறி ஆரம்பம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

முறைசாரா கல்வி த் திட்டத்தின் கீழ், உலர் வாழை இலைகள் தொடர்பான பல் வகை சார்ந்த கைவினைப் பாடநெறிகள் அநுராதபுரம் மாவட்டத்தின் பல இடங்களில் இந்த நாட்களில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. வடமத்திய மாகாண முறைசாரா கல்விப் பிரிவின் தலையீட்டுடன் இப்பாடநெறி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அநுராதபுரம் பசுமைத் தோட்ட நிலையம் மற்றும் அநுராதபுரம் கல்வி வலயத்தை மையமாகக் கொண்ட ரம்பாவ பௌத்த நிலையம் ஆகியவற்றில் இப் பாடநெறிகள் போதிக்கப்படுகின்றன. கல்வி அமைச்சின் ஆதரவுடன் வட மத்திய மாகாண கல்வித் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.



இந்த உலர் வாழை இலை கைவினைப் பயிற்சியில் பாடசாலை கல்வியை முடித்த இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர் துறையில் நுழைய விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் பங்கேற்கலாம். புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

உலர் வாழை இலைகள் தொடர்பான வடிவமைப்புகளுக்கு பெயர் பெற்ற விருது பெற்ற வடிவமைப்பாளரான திரு. சிட்டிவிலி கொஹொலங்கொட இந்தப் பாடநெறிக்கான பயிற்றுவிப்பாளராகச் செயற்படுகின்றார் என்பது குறிப்படத்தக்கது.

## கற்பிட்டி அல் அக்ஸாவின் இரு மாணவர்கள் தெரிவு



**புத்தளம் தினகரன் நிருபர்**

மாகாண மட்டத்தில் இடம்பெற்ற சமூக விஞ்ஞான போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையைச் சேர்ந்த உயர்தர மாணவி எம்.ஐ.எப். ஆதிகா மற்றும் தரம் 08 ஐச் சேர்ந்த மாணவன் எம்.எஸ்.எம். அத்னான் ஆகிய இருவரும் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.என்.எம் நஸ்ரின் தெரிவித்துள்ளார்.

மேற்படி இருவரின் வெற்றிக்கும் பங்காற்றிய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பாடசாலையின் நிர்வாகம் சார்பாக தனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் பாடசாலையின் அதிபர் எம்.என்.எம். நஸ்ரின் தெரிவித்துள்ளார்.

## யானை – மனித மோதல் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தல்

யானை மனித மோதல் மற்றும் அதற்கான இழப்பீடுகள் வழங்குதல் தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வொன்றுஅண்மையில்அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் சந்தியா என். ஜி. அபேசேகர தலைமையில் அநுராதபுரத்தில் இடம் பெற்றது.

அநுராதபுரம் மாவட்டத்தின் 18 பிரதேச செயலக பிரிவுகளில் இந்த யானை மனித மோதல்கள் முதலிடத்தில் உள்ளன. இவற்றால் ஏற்படும் இறப்பு, உடல் உபாதைகள் மற்றும் சொத்து சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும் முறையை வனவிலங்கு பாதுகாப்புத் துறை தற்பொழுது செயல்படுத்தி வருகிறது. அதனால் இவற்றை சரியாகவும் திறமையாகவும் செயல்படுத்தவும், பாதிப்புக்கு உள்ளானோருக்கு உடனடி இழப்பீடுகளை வழங்கவும் உரிய அதிகாரிகள் தெரிந்திருக்க வேண்டியது அவசியமானது. அதன்படி, இவற்றுக்கு பொறுப்பான கிராம அலுவலர், அநுராதபுரம் வனவிலங்கு வலய அலுவலகங்களின் பொறுப்பதிகாரி மற்றும் பிராந்திய செயலக பேரிடர் அலுவலர்களுக்கு தெளிவுபடுத்தல் நிகழ்வு இங்கு இடம் பெற்றது.

யானை மனித மோதலால் ஏற்படும் மனித உயிரிழப்புகள், உடல் சேதங்கள் மற்றும் சொத்து சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும் பணியை சிறப்பாக மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும் என அநுராதபுர மாவட்ட மேலதிக செயலாளர் சந்தியா என்.ஜி. அபேசேகர இங்கு தெரிவித்தார்.

# கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் நாட்டின் நன்மதிப்பை பாதுகாத்துள்ளது





வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்ட கெட்டம்பே மேம்பாலத்தை மீள ஆரம்பிப்பது தொடர்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில், விசேட ஊடகவியலாளர்கள் சந்திப்பு ஒன்று கண்டியில் நடைபெற்றது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஹங்கேரிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர்.

இங்கு பேசிய அமைச்சர்,

“அந்நியக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து வெளிநாடுகள் மீண்டும் நம் நாட்டைக் கண் திறந்து பார்க்க ஆரம்பித்துள்ளன. அதன்படி ஹங்கேரி அரசின் பிரதிநிதிகள் இந்நாட்டுக்கு வந்து கெட்டம்பே மேம்பால கட்டுமானப் பணிகளை மீண்டும் தொடங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

கண்டி நகரை பசுமை நகரமாக அபிவிருத்தி செய்வதற்காக உலக வங்கியின் பிரதிநிதிகள் நாட்டிற்கு வந்து 200 மின்சார பஸ்களை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அதற்காக வெளிநாடுகளுடன் உறுதிப்பத்திரங்கள் கையெழுத்திடப்பட்டு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. வரலாற்றில் முந்தைய அனைத்து அரசாங்கங்களும் தேவைக்கேற்ப பணத்தை அச்சிடும் திறன் பெற்றிருந்தன. ஆனால், தற்போது மத்திய வங்கி சட்டம் திருத்தப்பட்டு பணம் அச்சிடுவது சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தைக்கு தேவையான முறையில் இறையாண்மை பத்திரங்களை வெளியிடுவது மற்றும் கடன்களை பெறுவது சாத்தியமில்லை. பாராளுமன்றத்தில் கடன் கட்டுப்பாடு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டாலும், அந்த வாக்குறுதிகளுக்கு தேவையான வகையில் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க முடியவில்லை. பாராளுமன்றம் நிதி முகாமைத்துவ சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

2042 வரை பின்பற்ற வேண்டிய கொள்கைகளுடன் பொருளாதார மாற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஊழல், இலஞ்ச, முறைகேடுகளைத் தடுக்க இதுவரை ஊழல் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட 5 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த ஐந்து சட்டங்களில் ஒன்றைக் கூட மாற்றி நாட்டை முன்னோக்கிப் பராமரிக்க முடியாது.

## ரூ. 3,000 விசேடகொடுப்பனவு...

கொடுப்பனவாக 3,000 ரூபாவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் அனைத்து அரச ஓய்வூதியக்காகரர்களுக்கும் வழங்குவதற்கு அன்றைய கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

## தங்கத்தின்...

நிலவரத்தின் படி ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 7,24,799 ரூபாவாக காணப்பட்டது.

அத்துடன் 24 கரட் தங்க கிராமின் விலை (24 கரெட் 01 கிராம்) 25,570 ரூபாவாக பதிவாகியுள்ளது. 24 கரட் தங்கப் பவுண் (24 கரெட் 8 கிராம்) 2,04,550 ரூபாவாக பதிவாகியது.

## வைத்தியர் அர்ச்சுனா...

கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக, அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடமையிலிருந்த வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை சுமத்தி, வைத்தியசாலை நிர்வாகம் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கடந்த சனிக்கிழமை வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை கைது செய்தனர்.

## IMF உடன்படிக்கையில்...

மக்களுக்கே இந்த திட்டம். பென்ஸ் காரில் வருபவர்களுக்கு, இரவில் 20 ஆயிரம் ரூபாவுக்கு உண்பவர்களுக்கு இந்த நிவாரணம் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 முதல் காலாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட பொருளாதார முன்னேற்றத்தை, தொடர்ந்தும் பலப்படுத்துவது தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## காணாமல்போன மீனவர்களை மீட்டல்:...

இர்பான், கே. ஆர். நிஸ்பர் ஆகியோர் காணாமல் போயினர். இம் மாதம் 02ஆம் திகதி தமிழ் நாட்டிலிருந்து வெளியான செய்தியில் நாகப்பட்டினப் பகுதியில் இலங்கை மீனவர் ஐ.எல்.அகமது இர்பான் கரை சேர்ந்துள்ளதாகவும் தமிழ் நாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மீனவரை இலங்கைக்கு அழைத்து வர இராஜதந்திர ரீதியில் இந்திய உயர்ஸ்தானிகரூடாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ரவூப் ஹக்கீம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்ததுடன், கடந்த மாதம் 07ஆம் திகதி பருத்தித்துறையிலிருந்து இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்ற எம்.எஸ்.முஸ்தகீம் (அட்டாளைச்சேனை), என். குணபாலசிங்கம், ஏ.கே. பீ.பிரமேசிறி, ஏ.இராமகிருஷ்ணன் ஆகிய மீனவர்கள் காணாமல் போன விடயம் தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடினார். அட்டாளைச்சேனையிலிருந்து தமிழ் நாட்டில் கரை சேர்ந்துள்ள மீனவர் ஐ.எல்.அகமது இர்பானை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான இராஜதந்திர ரீதியிலான ஏற்பாடுகளை இங்குள்ள இந்திய உயர்ஸ்தானிகருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளப்படும் எனவும், பருத்தித்துறையில் இருந்து காணாமல் போன நான்கு மீனவர்கள் தொடர்பில் ஏற்கனவே பல நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் இதுவரை அம்மீனவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடைக்காமல் உள்ளதாகவும், அந்த மீனவர்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்ததும் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்தார்.

## நாட்டின் எதிர்காலம்...

ஆளுமைமைய வெளிப்படுத்தியுள்ளதால் தனக்கு யாருடனும் போட்டி கிடையாதெனத் தெரிவித்த ஜனாதிபதி, அரசாங்கம் ஆரம்பித்துள்ள பொருளாதார வேலைத் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் ஆணையை இந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களிடம் கோருவதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு சினமன் கிரேன்ட் ஹோட்டலில் நேற்று (07) நடைபெற்ற ஊடக பிரதானிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியம் அல்லது கடன் வழங்குநர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் எந்த அளவுகோலையும் மாற்ற முடியாது எனவும், அவ்வாறு செய்தால் இலங்கைக்கு அந்த நிதியை இழக்க நேரிடும் எனவும் எனவே அனைத்து வேட்பாளர்களும் வாக்காளர்களுக்கு உண்மையை கூற வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சிலரால் ஊழலைப் பற்றி பேச மட்டுமே முடிகிறது. ஆனால் ஊழலைத் தடுக்க பல சட்டங்களை இயற்றியுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மோசடி ஊடாகச் சம்பாதித்த சொத்துக்கள் தொடர்பாக விசாரிப்பதற்கான சட்டமூலத்தை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார். ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான எவரையும் தாம், ஒருபோதும் பாதுகாக்கவில்லை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

"ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்திய பின்னர், முதன்முறையாக ஊடகவியலாளர்களைச் சந்திக்கத் தீர்மானித்தேன். வேறு எவரும் முன்வராத காரணத்தினால்தான், இன்று நான் ஜனாதிபதியாக செயற்படுகின்றேன். நான் ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டு வருடங்களுக்குள் நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுத்தேன். இலங்கையின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதென்றும் அவர் கூறினர். பொருளாதார நெருக்கடியிலிருந்து கிரேக்க நாடு மீள்வதற்கு 10 வருடங்களானது. இந்தோனேசியாவுக்கு 08 வருடங்கள் பிடித்தது. இந்த பிரச்சினையை இலங்கை எவ்வாறு தீர்க்கும் என சிலர் கேள்வி எழுப்பினர்.

ஆனால், இந்த பிரச்சினையை குறுகிய காலத்தில் தீர்க்க முடியும் என்று நான் நம்பினேன். இது தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடினேன். அதனால் அச்சமின்றி இந்த சவாலை ஏற்றுக்கொண்டேன். ஆனால் என்னை ஆதரிக்க எந்த ஒரு தனிக் கட்சியும் இருக்கவில்லை. பொதுஜன பெரமுனவின் ஒரு குழு எம்முடன் இணைந்தது. மற்றொரு குழு எதிர்க்கட்சிக்கு சென்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழுவும் எம்முடன் இணைந்தது. சிலர் எதிர்க்கட்சியில் இணைந்தனர். நான் கட்சியொன்றில்லாமல் ஆட்சியமைத்து இந்தப் பொறுப்பை ஏற்றேன். இப்போது முதற்கட்ட பணிகளை முடித்து விட்டோம். நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து விடுவிக்க நாம் இப்போது வழி வகுத்துள்ளோம். அந்தப் பாதையில் தொடர்ந்து பயணிப்போம்.

இந்த நாட்டின் பொருளாதார முறைமை சீர்குலைந்ததால் மக்கள் பாதிக்கப்பட்டனர். மேலும், வரிச்சுமை அதிகரித்ததால், சிலர் அதனைச் சுமக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதற்காக, நான் வருந்துகிறேன். ஆனால் அதைச் செய்யாமல் நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுக்க முடியவில்லை. நாம் உண்மையைச் சொல்வதற்குத் தயாராக இல்லை என்பதே எமது நாட்டு அரசியலில் உள்ள சிக்கலாகும்.

நிலையான ஸ்திரத்தன்மை இல்லாமல் ஒரு நாடு முன்னேற முடியாது. பங்களாதேஷில் நடைபெறும் விடயங்களை தொலைக்காட்சியில் பார்த்தபோது, இந்த நாட்டைக் பொறுப்பேற்றிரு க்காவிட்டால் எமது நாட்டின் கதி என்னவாக இருந்திருக்குமென்று சிந்தித்தேன். பங்களாதேஷ் பிரதமருக்கு விலகுமாறு கூறப்பட்டாலும் நிர்வாகத்தை ஏற்க எந்த நிறுவனமும் இருக்கவில்லை. இராணுவம் தலையீடு செய்ய முயன்றாலும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாதென போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். முஹம்மது யூனுஸை பிரதமராக நியமிக்க வேண்டுமென்று அவர்கள் கோரியுள்ளனர். அந்நாட்டு அரசியலமைப்புச் சட்டம் பிரதமராக வருவதற்கு எம்.பி.யாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. அந்த நிலை எமது நாட்டுக்கு வந்தால் என்ன நடக்கும்? எமது நாடு அதிர்ஷ்டகரமான நாடு. எப்படியாவது ஒரு அரசாங்கத்தை உருவாக்கினோம். அதனால்தான் இன்று ஜனாதிபதி தேர்தலை நடத்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்த ஜனாதிபதி தேர்தலில் நாட்டின் எதிர்காலத்தையே நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இந்தப் பாதையில் தொடர்ந்து முன்னேறி அபிவிருத்தியடைந்த நாடாக மாறப்போகிறோமா? நாட்டில் கஷ்டப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப் போகிறோமா? இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கப் போகிறோமா? இல்லையேல் பழைய அரசியலில் ஈடுபட்டு பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைந்து வரிசை யுகத்துக்கு செல்லப் போகிறோமா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

முகங்களைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. நாட்டைக் காப்பாற்றும் வலிமையும், கொள்கையும் தங்களுக்கு இருக்கிறதா? இல்லையா? என்பதை தான் மக்கள் தீர்மானிக்க வேண்டும். இந்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களின் எதிர்காலத்தையன்றி நாட்டின் எதிர்காலம் மற்றும் மக்களின் எதிர்காலத்தைத் தான் தீர்மானிக்க வேண்டும். இங்கிருந்து படிப்படியாக முன்னேறுவதா? நாட்டின் பிரச்சினைகளை பலத்துடன் தீர்ப்பதா? அல்லது 2022இல் இருந்த நிலைக்கு செல்வதா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனும், எமக்கு கடன் வழங்கும் நாடுகளுடனும் செய்துள்ள ஒப்பந்தங்கள் எதனையும் மீற முடியாது. தற்போதுள்ள இந்த இலக்குகள் மற்றும் வரையறைகளை மாற்ற முடியாது. அப்படி செய்தால் எமக்கு நிதி கிடைக்காது. அந்த நிலையில் நமது நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும்.

பல்வேறு கட்சிகளும் வெவ்வேறு வாக்குறுதிகளை அளிக்கலாம். ஆனால் அவற்றை நிறைவேற்றுவது சாத்தியமில்லை. அந்த நிலையில் வற் வரியை அதிகரிக்க நேரிடும். அதுதான் யதார்த்தம். உண்மையைச் சொல்லி நாட்டைக் காப்பாற்றத் தயாரா?, பொய் சொல்லி ஆட்சியைப் பிடிக்கத் தயாரா? என்பதைச் சிந்திக்க வேண்டும். எனவே, அரசாங்கம் ஆரம்பித்துள்ள இந்த வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க மக்கள் ஆணையை கோருகிறேன்" என ஜனாதிபதி தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

கேள்வி: தம்மிக்க பெரேரா போட்டியிலிருந்து விலகியதையடுத்து ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவிலுள்ள பெரும்பாலானோர் உங்களுடன் இருக்கிறார்கள். ஆனால் நாமல் ராஜபக்ச கடும் போட்டியாக இருப்பார் என்று எதிர்பார்க்கிறீர்களா?

பதில்: போட்டி எப்படி அமையும் என்பது தெரியவில்லை. நான் யாருடனும் மோதலுக்கு வரவில்லை. நாட்டைக் கட்டியெழுப்பும் கொள்கையை மக்களிடம் முன்வைத்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான வழியை காட்டவே முன் வந்துள்ளேன். அந்த கொள்கைகளை விரும்பினால் வாக்களிக்கலாம். மற்றவர்கள் சொல்வதை நான் பொருட்படுத்தப் போவதில்லை.

கேள்வி: பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்கள் உங்களுடன் இருப்பதால் அவர்களுடன் இணைந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்: என்னுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று உள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் இருந்தால், அவர்கள் மீது வழக்குத் தொடரலாம். அது எதையும் நான் நிறுத்தவில்லை.குற்றச்சாட்டு உள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதா? இல்லையா? என்பதை வாக்காளர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இதுவரை யாரும் செய்யாத வகையில் ஊழல் தடுப்புச் சட்டத்தை கொண்டு வந்துள்ளோம்.

குற்றச் செயல்களால் சம்பாதித்த சொத்துக்கள் தொடர்பான சட்டமூலம் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படும். அனைவரும் ஊழல், ஊழல் என்று கூக்குரலிட்டாலும், அதற்கு என்ன செய்வது என்று யாரும் கூறவில்லை. ஆனால் நாம் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எனது அடுத்த பயணம் ஜனாதிபதியாக வேண்டும் என்பதே. அவர்களின் அடுத்த பயணம் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதே. வாக்காளர்கள் அவர்களை நிராகரித்தால், அந்தப் பிரச்சினை அத்துடன் முடிவு பெறும். எனது ஆட்சிக் காலத்தில் யாரேனும் ஒரு எம்.பி.க்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கு நான் எவ்வித அழுத்தங்களையும் பிரயோக்கவில்லை.

நான் யாரையும் பாதுகாக்கவில்லை. அரசியலில் நாம் வெவ்வேறு நபர்களுடன்செயற்படுகிறோம். அவர்கள் திருடர்களா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பது சட்டம் சார்ந்த விடயமாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(08.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டிய சூழல் ஏற்படும். சொந்தத் தொழிலில் பணிச் சுமை அதிகரிக்கும்.

**ரிஷபம் :** சாமர்த்தியமான செயல்களால் காரியங்களை சாதித்து கொள்வீர்கள். சொந்த தொழில் செய்பவர்கள் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயல்படுவார்கள்.

**மிதுனம்:** சொந்த தொழில் செய்பவர்கள் புதிய வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த ஓய்வின்றி உழைத்து வேலையை முடிப்பார்கள்.

**கடகம்:** சொந்த தொழில் செய்பவர்கள் கால நேரம் பாராமல் அவசியமான பணி ஒன்றை செய்து கொடுக்க நேரிடும்.

**சிம்மம்:** சொந்த தொழிலில் பழைய வாடிக்கையாளர் ஒருவரால் புதிய நபரின் அறிமுகமும் அவரால் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படக்கூடும்.

**கன்னி:** சொந்த தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களின் விருப்பப்படி வேலை ஒன்றை விரைவாக முடித்துக் கொடுக்க ஓய்வின்றி உழைப்பீர்கள்.

**துலாம்:** சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் மூலம் வேலைகளும் பணவரவுகளும் கிடைக்கும்.

**விருச்சிகம்:** சொந்த தொழிலில் ஈடுபடுபவர்கள் ஓய்வில்லாமல் பணிகளில் கவனம் செலுத்த வேண்டிய சூழல் ஏற்படும்.

**தனுசு:** உத்தியோகத்தில் உள்ளவர்கள் சகபணியாளர்களிடம் சுமூகமாக நடந்து கொள்ளுங்கள்.

**மகரம்:** சிலருக்கு அலுவலகத்தின் மூலம் வரவேண்டிய கடன் தொகை கிடைக்கும்.

**கும்பம்:** உயர் அதிகாரிகளின் விருப்பப்படி முக்கிய வேலை ஒன்றை விரைவாக செய்து கொடுப்பீர்கள்.

**மீனம்:** சொந்த தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் மூலம் வேலைப்பளு கூடும்.

## 2025: பட்ஜட்டில்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த வளர்ச்சி தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது கட்டுமானத்துறை மற்றும் வீதிகளின் புனரமைப்புப் பணிகள் உட்பட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்குப் பின்னர், தற்போது மீண்டும் அவை ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

## IMF உடன்படிக்கை இரத்து... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற 2024 முதல் காலாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட பொருளாதார முன்னேற்றத்தை தொடர்ந்தும் பலப்படுத்துவது தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## விசாரணைகள் நடத்தப்பட்டு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அந்த பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கல்வியமைச்சு பணிப்புரைகளை விடுக்கும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

## தேர்தலில் யாரை ஆதரிப்பது?...

தெரிவித்துள்ளார். கட்சியின் உயர்பீடக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

## பணவீக்கம் 69 வீதத்திலிருந்து...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றிருக்காவிட்டால், தற்போது பாராளுமன்றத்தை கூட்டுவதற்கும் முடியாமல் போயிருக்கும் அத்துடன் பாராளுமன்ற கட்டிடமும் அழிவடைந்திருக்கும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

## வாக்களிப்பு நிலையங்களின்...

பொலிஸ் உயரதிகாரிகளை அழைத்து, கலந்துரையாடவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## கல்பிட்டி களப்புக்குள்ளிருந்து...

கடற்கரை பகுதியில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

## பங்களாதேஷில் இடைக்கால...

ஜனாதிபதி மொஹமட் சஹாப்தீன், இராணுவத் தலைவர்கள் மற்றும் அங்கு தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ள பல்கலைக்கழக மாணவர் குழுக்களின் தலைவர்கள் ஆகியோருக்கிடையேயான சந்திப்பில், இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்...

இதனை உறுதிப்படுத்தியிருந்தார். இந்நிலையில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ, கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

## இணையத் தளங்களில் தம்மை...

அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## இலங்கை –இந்திய கப்பல்...

இடைநிறுத்தப்பட்டது. இதனையடுத்து, அடுத்த வாரம் முதல் மீண்டும் கப்பல் சேவை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக மீனவர்களை விடுவிக்க...

27 படகுகள் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதுவரைக்கும் சுமார் 177 படகுகள் இலங்கை தரப்பினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்படுகின்ற தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படுகின்ற போதிலும், அவர்களது படகுகள் விடுவிக்கப்படுவதில்லையெனவும் கனிமொழி கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.




# சிங்கராஜா வனத்தை மையமாக கொண்டு சுற்றுலா அபிவிருத்தி திட்டம்

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**





உலக பாரம்பரிய சிங்கராஜா வனத்தின் எல்லையிலுள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் இறக்குவானை, சூரியகந்தை மற்றும் கலவான ஆகிய நகரங்களை சுற்றுலா வலயமாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

அதுமட்டுமின்றி மேற்படி சிங்கராஜா பிரதேசம் உட்பட சூரியகந்தை, இறக்குவானை, அதபான் நீர்வீழ்ச்சி, கலவான பிரதேசங்களை சுற்றுலா வலயமாக மாற்றுவதற்கான ஆரம்பகட்ட வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதில் மேற்படி பிரதேசங்களை சேர்ந்த வர்த்தகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டதுடன் இதற்கு சிங்கராஜா பைய்பர் சுற்றுலா அபிவிருத்தி வேலைத்திட்டம் எனவும் பெயரிடப்பட்டுள்ளது.

இதன் கீழ் சுற்றுலாப் பயணிகள் இறக்குவானை அதபான் நீர்வீழ்ச்சி, சூரியகந்த மோனிங்சைட் போன்ற பிரதேசங்களுக்கு செல்வதற்கான வீதி அபிவிருத்தி வேலைத்திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கென ரூ.10 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புவியியல் வரைபுக்கமைய கடல் மட்டத்திலிருந்து 2000 அடி உயரத்திலுள்ள சிங்கராஜா பிரதேசம் புலுதொட்ட பள்ளத்தாக்கு, பத்து வளைவுகளை கடந்து மாதம்பை தொடக்கம் காலி வரை நீண்டு செல்கிறது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் சூரியகந்தை பிரதேசத்தில் தற்போது உள்ள பஸ் நிலையம், எரிபொருள் நிலையம் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. மேலும் இறக்குவானை கலவான வீதி 42 கி.மீ முதல் 49 கி.மீ வரையுள்ள வீதி புனரமைப்பு பணிகள், இறக்குவானை நகரின் வாடி வீடுக்கு முன்னால் அமைந்துள்ள தரிசு வயல் நிலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு படகு சவாரி அமைத்தல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்.

இறக்குவானை கலவான வீதியில் 04 ஆம் கட்டையில் கேபில் கார் திட்டம், அதபான் நீர்வீழ்ச்சி அமைத்தல். போட்டியாதென்ன எலின்டன் தோட்டத்தில் கொல்ப் மைதானம் அமைத்தல்.

எலின்டன் தோட்டத்தின் இலக்கம் 09 பிரிவில் தாவரவியல் பூங்கா அமைத்தல். வான் பலூன் விளையாட்டை நிறுவுதல். போட்டியாதென்ன பிரதேசத்தில் வர்த்தக நிலையம் அமைத்தல்.

ஹெலிகொப்டர் முற்றம் அமைத்தல் மற்றும் அவசர நேரத்தில் விமானப்படை பிரிவின் உதவியை பெறுவதற்கு விமானப்படை பிரவு ஒன்றை அமைத்தல்.

மேற்படி பிரதேசத்தில் உள்ள நீர் வீழ்ச்சிகளை பார்வையிட வீதிகளை அபிவிருத்தி செய்தல்.

ரஜவத்த ரம்புக்க பிரதேசத்தில் கைத்தொழில் மற்றும் மாணிக்கக் கல் கொள்வனவு செய்வதற்கான வளாகம் அமைத்தல். ரஜவத்த வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் உள்ள 25 ஏக்கர் தோட்ட காணியை பெற்று உல்லாச விடுதி திட்டத்தை அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.



பசறை, யூரி தோட்டம், மாப்பாகல பிரிவு புனித வண.சின்னப்பர் ஐக்கிய தேவாலயத்தின் வருடாந்த அபிஷேக ஆராதனை அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்திரு.ஜேசுபாலன் அடிகளார், பசறை பங்கின் ஆன்மீகக் குரு, அருட்திரு ஜோசப் அடிகளார், பதுளை புனித மரியாள் பேராலய பங்குதந்தை அருட்திரு. கிளாரட் அடிகளார் ஆகியோரின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. **(படம்: பசறை நிருபர்)**

# இரத்தினபுரியில் சமூக சீர்கேடு சம்பவங்கள் அதிகரிப்பு; மக்கள் புகார்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மற்றும் புறநகர் பகுதிகளில் சட்டவிரோத விபசார நடவடிக்கைகள் அதிகரித்துவருவதாக பொதுமக்கள் தரப்பில் குற்றம்சாட்டப்படுகின்றது.

இந்நிலையில் இளைய தலைமுறை மற்றும் பாடசாலை மாணவர்களும் இதனால் பாதிக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் விபசார விடுதிகள் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது மிகவும் சூட்சுமமான முறையில் நடமாடும் விபசாரவிடுதிகள் நடாத்தப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதற்காக முச்சக்கரவண்டிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதாக தெரியவருகின்றது.

முச்சக்கரவண்டிகள் சமூகசீர்கேடுகளுக்கு பயன்படுத்தப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இரத்தினபுரி மாவட்டத்தில்

# தினமும் 57 தொன் பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகள்



**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் தினமும் 57 தொன் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் சுற்றாடலில் வீசப்படுவதாக இரத்தினபுரி மாவட்ட சுகாதாரச் சேவை அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இவற்றில் 16 வீதம் முறையாக அகற்றப்படுவதுடன் மிகுதி 84 வீதமான பிளாஸ்டிக் பொலித்தீன் கழிவுகள் மாவட்டத்தின் ஆற்றங்கரைகள் மற்றும் நீர்நிலைகளில் வீசப்படுவதாக தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 18 பிரதேச செயலகப்பிரிவுகளில் காணப்படும் 575 கிராம சேவகர் பிரிவுகளிலும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை அகற்றி பொதுமக்களுக்கு பொருத்தமான சுகாதாரமான சுற்றாடலை உருவாக்கி கொடுக்கும் நோக்கத்துடன் இவ்வமைப்பு பல்வேறு செயற்றிட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

இந்திய அரசின் நிதியுதவியுடன்

# தோட்டப்புறப் பாடசாலைகளில் STEM ஆசிரியர் பயிற்சித் திட்டம்

இந்திய அரசின் நிதியுதவியுடன் தோட்டப்புறப் பாடசாலைகளில் STEM ஆசிரியர் பயிற்சித்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

STEM பாடங்களான பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம், ஆங்கிலம் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்திய வம்சாவளி தமிழ் சமூகம் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் பூர்த்தியடைவதை முன்னிட்டு ரூ.750 மில்லியன் செலவில் இதற்கென நிதி இந்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்ச்சித் திட்டம் பிரதமர் அலுவலகமான அலரிமாளிகையில் கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கைக்கான இந்தியாவின் துணை உயர்ஸ்தானிகர் சத்யாஞ்சல் பாண்டே, கல்விமைச்சு, நீர்ப்பாசன மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் என்பனவற்றின் உயர் அதிகாரிகள் மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்த ஆசிரிய பயிற்சியாளர்கள், தோட்டப்புறப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 1000 ஆசிரியர்கள் என பலரும் இதில் பங்கேற்றனர். ஆசிரியர் பயிற்சி திட்டத்தின் கீழ், STEM பாடங்களில் பயிற்சியளிப்பதில் நிபுணத்துவம் பெற்ற 19 இந்திய ஆசிரியர்கள் கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி இலங்கை வந்தனர். ஜூலை 22 முதல் ஆகஸ்ட் 2 வரை நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, கல்விமைச்சு ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டதோடு தோட்டப்புறப் பாடசாலைகளுக்கான கள விஜயங்களையும் அவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இதுதொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடல் ஆரம்ப அமர்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் கலந்துகொண்டு உரையாற்றினார்.

பாடத்திட்டங்களை மதிப்பாய்வு செய்தல், குறிப்பிட்ட மனிதவள மற்றும் உட்கட்டமைப்பு தேவைகள் மற்றும் திட்டத்தின் விளைவுகளின் எதிர்பார்ப்புகள் பற்றிய ஆழமான புரிதல், இலங்கையின் கல்வி முறை மற்றும் கற்பித்தல் நுட்பங்களைப் புரிந்துகொள்வது, பாடத்திட்டத்திலுள்ள வேறுபாடுகளைக் கண்டறிதல் என்பன குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டன. 10 வாரங்கள் கொண்ட பயிற்சித் திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலை ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலுள்ள சுமார் 40 நிலையங்களில் பயிற்சி அமர்வுகளை மேற்கொள்வார்கள்.

# கலேவெல – கொரக்காவ பள்ளிவாசலில் முஹர்ரம் விழா

**தம்புள்ள தினகரன் நிருபர்**

கலேவெல,கொரக்காவ மஸ்ஜிதில் ஸலாஹ் பள்ளி மத்ரஸாவின் முஹர்ரம் தின விழா மத்ரஸாவின் அதிபர் ஹழரத் ஐ.எம்.எம்.நபீல் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் மாத்தளை மாவட்ட பணிப்பாளரும், அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய எஸ்.எச்.எம்.இக்பால் கலந்து கொண்டார். கிராஅத், கஸீதா, ஸூரா மனனம்,இஸ்லாமிய கீதம், மற்றும் கலிமா மன்னம் ஆகிய போட்டி நிகழ்ச்சிகளில் பங்குப் பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்பட்டன. கலேவெல, நமடகஹவத்த ஜும்ஆ மஸ்ஜிதின் பேஸ் இமாம் மௌலவி எஸ்.எம். ஹாலிதீன் நிகழ்ச்சி அறிவிப்பாளராக கடமையாற்றியதுடன் முஹர்ரம் மாதத்தின் சிறப்புகள் பற்றியும் சிறப்புரை ஆற்றினார்.

# ஆசிரியர் உதவியாளர் போட்டிப் பரீட்சை பரீட்சார்த்திகளுக்கு இலவச வழிகாட்டல்



**பொகவந்தலாவ நிருபர்**

ஆசிரிய உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான இலவச வழிகாட்டல் நூல்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன.

மலையக மாணவர் விழிப்பகத்தின் ஊடாக மலையகமெங்கும் விசேட கருத்தரங்குகள் இடம்பெற்று வருவதுடன் பரீட்சார்த்திகளுக்காக இலவச வழிகாட்டல் நூல்களும், கையேடுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் நேற்றைய தினம் பொகவந்தலாவ கெம்பியன் பிரதேசத்தில் பெற்றசோ, லொய்னோன், கெம்பியன் ஆகிய பிரதேசங்களில் ஆசிரியர் உதவியாளர் போட்டிப்பரீட்சைக்கு தோற்றவிருக்கும் 50ற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகளுக்கான இலவச நூல்களை கெம்பியன் தமிழ் வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.




**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - மேல் மாகாணம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மேல் மாகாணத்திலுள்ள மருத்துவ நிறுவனங்களுக்கான நிர்மாணம்**

1. கொழும்பு-10, மாளிகாவத்தை செயலகக் கட்டிடம், மாகாண சுகாதார சேவைகள் அலுவலக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் உருப்படிகளுக்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார் என்பதுடன் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024-08-22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முடிவுறுத்தப்படும்.

| இல. | விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | விலைக்கோரலின் பெயர் | 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம் | மீளளிக்கப் படாத விலைமனுக் கட்டணம் (ரூபா) | CIDA தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | WP/PD/PRO/02/Con/ Gampaha-2 /2024 | கம்பஹா மாவட்டப் பொது வைத்தியசாலையில் உள்ள ENT வார்டின் புதுப்பித்தல்கள் | ஆம் | 3,500.00 | C6 மற்றும் C5 |
| 2 | WP/PD/PRO/02/Con/ Gampaha-3/2024 | கம்பஹா மாவட்டப் பொது வைத்தியசாலையில் புற்றுநோயியல் பிரிவு முதல் சனச கட்டிடம் வரையிலான நடைபாதைக்கு கூரையை நிர்மாணித்தல் | ஆம் | 2,000.00 | C8 மற்றும் C7 |
| 3. | WP/PD/PRO/02/Con/ Nugegoda- /2024 | நாவல, மில்லகஹாவத்தயில் தற்போதுள்ள சிகிச்சைக் கட்டிடத்தின் புதுப்பித்தல்கள் (கட்டம் II - மேல் தளம்) | ஆம் | 4,000.00 | C5 |

2. 2024.08.08ஆம் திகதி முதல் 2024.08.21ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், மேல் மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை வளமுள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களினால் சமர்ப்பிப்பதன் பேரில் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
3. 2024-08-22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கோரல்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் கொழும்பு-10, த.பெ. இல. 876, மாளிகாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் (மே.மா) உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.
4. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் (மேல் மாகாணம்) அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளரின் (நிர்வாகம்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
5. விலைமனு ஆவணத்தின் மூலப்பிரதி மற்றும் அதன் நகல் பிரதியை வெவ்வேறான முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் விலைமனு குறிப்பீட்டு எண் எழுதப்படல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து மேல் மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும். தொடர்பிலக்கம்: 011-2434852 / 011-2437154

**மருத்துவர் திருமதி தம்மிக ஜயலத்,**
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (மே.மா),**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் (மே.மா),**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**

# கிழக்கின் குரல்



## சிறந்த உணவு பழக்க முறையை மாணவர் கடைப்பிடிக்க வேண்டும்

### பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி

**(ஒலுவில் விசேட நிருபர்)**

பாடசாலை பருவத்தில் மாணவர்கள் சிறந்த உணவு பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டுமென, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரியும் அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகருமான எம்.எஸ்.எம்.அப்துல் மலீக் தெரிவித்தார்.

பொத்துவில் அல் கலாம் முஸ்லிம் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு போசாக்கு உணவு மற்றும் தனிநபர் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"பிள்ளைகளின் மூளை விருத்திக்கு ஆரோக்கியமான உணவு இன்றியமையாததாகும்.

ஆகையால் மாணவர்கள் பாடசாலை பருவத்தில் சிறந்த உணவு பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். சீரான உணவு பழக்கம் இன்மையால் எமது நாட்டில் சிறு பிராயத்திலிருந்தே தொற்றா நோய்களுக்கு அவர்கள் உள்ளாகி வருகின்றனர்.

சிறந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கும் நாட்டில் வாழும் மக்கள் சுகதேகிகளாக வாழவும் ஒவ்வொருவரும் சிறந்த உணவு பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.



இவ்வாறான நோய்த் தாக்கங்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்களை சுகாதார அமைச்சினூடாக அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

தனிநபர் சுகாதார பழக்கத்தை தமது வாழ்க்கை நடைமுறையில் பின்பற்றி நடக்காதவர்கள் இன்று பல பாரிய நோய்களுக்கு உள்ளாகி வருவதை நாம் காண்கிறோம்.

ஆகையால் நாம் சிறந்த சுகாதார பழக்கத்தை கடைப்பிடித்து எமது வாழ்க்கையை சிறந்த முறையில் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## மட்டு. அபயம் பவுண்டேஷன் அமைப்பால் குடிநீர் வசதி



**(வாச்சிக்குடா விசேட நிருபர்)**

ஊறணி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் குடிநீர் இணைப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க மட்டக்களப்பு அபயம் பவுண்டேஷன் அமைப்பு முன்வந்துள்ளது.

இவ்வித்தியாலயத்தில் நீண்டகாலமாக இருந்து வந்த குடிநீர் பிரச்சினையை சீர்செய்யும் நோக்கில் மேற்படி பாடசாலை நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டமைக்கமைய மட்டக்களப்பு அபயம் பவுண்டேஷன் அமைப்பால் நிதி உதவி நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

அபயம் பவுண்டேஷன் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் வைத்தியர் தவநேசனின் வழிநடத்தலின் கீழ் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கண்ணதாசனால் இந்த நிதி உதவி வழங்கப்பட்டது. குடிநீர் இணைப்புக்கான உபகரணங்களை கொள்வனவு செய்து குடிநீர் வசதியை சீர்செய்யும் பொருட்டு நிதி உதவி வழங்கப்பட்டது.

இதன் மூலம் இப்பாடசாலையில் தேவைப்பாடாக இருந்த குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், இந்த நிதியை வழங்கிய அபயம் பவுண்டேஷன் அமைப்பினர் மற்றும் அதன் இணைப்பாளர்களுக்கு பாடாசலை நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.



மட்டக்களப்பின் கொத்துக்குளம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆடிப்பூர பாற்குட பவனி நேற்று புதன்கிழமை நடைபெற்றது. ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விக்கினேஸ்வரர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகிய பாற்குட பவனி கொத்துக்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்தை அடைந்தது. (படம்: மட்டக்களப்பு விசேட நிருபர்)

## மூதூரில் பழங்குடியினர் தின நிகழ்வு

**(கிண்ணியா மத்திய, திருகோணமலை தினகரன் நிருபர்கள்)**

சர்வதேச பழங்குடியினர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நீணாக்கேணி, மலைமுந்தல் பிரதேசத்திலுள்ள முருகன் ஆலயத்தில் பழங்குடியினர் தின நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி சர்வதேச பழங்குடியினர் தினமாகும்.

திருகோணமலை மாவட்ட குவேனி பழங்குடியின அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது தமது வாழ்க்கை பாரம்பரியத்துடனான மேள, தாள வாத்தியத்துடன் இசை இசைத்து அதிதிகளை பழங்குடியினர் வரவேற்றனர். இதன்போது பழங்குடியினரின் முறைப்படி பூஜை மற்றும் கூத்தும் நடைபெற்றன.

விருந்து உபசாரமாக பழங்குடியினரின் முக்கிய உணவான மரவள்ளிக்கிழங்கை பகிர்ந்தளித்தனர்.

மேலும் பழங்குடியினரின் நிகழ்வுக்கு வருகை தந்த அதிதிகளிடம் தாம் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள்,

தமது கோரிக்கைகளை திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான பழங்குடியின தலைவர்கள் வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பழங்குடியின தலைவர் நல்லதம்பி வேலாயுதம், திருகோணமலை மாவட்ட பழங்குடியின தலைவர் நடராசா கணகரட்ணம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்.எம்.இஸ்ஸடீன், மூதூர் உதவிப் பிரதேச செயலாளர் றொசானா ரஸீம், கிழக்கு மாகாண சுற்றுலா பணியக பணிப்பாளர் மதன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மூதூர் பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## வறுமையில் வாடும் பயனாளிகளுக்கு நிரந்தர வீடுகள் கையளித்து வைப்பு

**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**

திருகோணமலையில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் நிரந்தர வீடுகளை நிர்மாணித்து அவற்றை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இம்மன்ற தலைவர் எம்.ரீ.எம். பாரிஸ் தலைமையில் பயனாளிகளிடம் வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

கடந்தகால யுத்தம் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்டு மிக நீண்டகாலமாக நிரந்தர வீடுகளின்றி கஷ்டப்படும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 25 வீடுகள் நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



பெல்ஜியம் நாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனமான செலவிப் (SELAVIP) நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்வதற்கான இல்லறம் எனும் வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக திருகோணமலையில் 6 பயனாளிகளுக்கு வீடுகள் கையளித்து வைக்கப்பட்டன. இந்நிலையில் திருகோணமலையில் விளாங்குளம், இலுப்பைக்குளம், சல்லி, ஆத்திமோட்டை பிரதேசங்களிலுள்ள பயனாளிகளுக்கு இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன.

### அம்பாறையில்

## கலைஞர் அடையாள அட்டை வழங்கி வைப்பு

**(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)**

கலைஞர்களுக்கான தேசிய கலைஞர் அடையாள அட்டை வழங்கி வைத்தல் மற்றும் கலை மன்றங்களுக்கான வருடாந்த கொடுப்பனவு வழங்குதல் அக்கரைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கமைய அம்பாறை மாவட்ட கலாசார பிரிவின் ஏற்பாட்டில் இவை வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.ரின்சான் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் கலந்துகொண்டு அடையாள அட்டை மற்றும் கலை மன்றங்களுக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.



இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், கலைஞர்கள், உத்தியோகத்தர்களாகிய பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உரையாற்றிய போது,

"அம்பாறை மாவட்டத்திலுள்ள கலைஞர்களுக்கு தேவையான வசதிகள் மிகவும் சிறப்பாக செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். கலைத் துறையில் புதியவர்களை சிரேஷ்ட கலைஞர்கள் இணைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் கலை மன்றங்களை மாத்திரம் பதிவு செய்து ஓரிரு நிகழ்வுகளை நடத்தி விட்டு விடாது தொடர்ந்து செயற்பட வேண்டும். மக்களின் உள செயற்பாட்டில் கலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதை மேம்படுத்த கலைஞர்கள் சிறப்பாக செயற்பட வேண்டும்" என்றார்.

## காரைதீவு பிரதேசத்தில் மாணவ தூதுவர் நிகழ்வு

**(காரைதீவு குறூப், மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்)**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தேசிய நிகழ்ச்சி திட்டத்துக்கமைய சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக மாணவர்களுக்கான மாணவ தூதுவர் மாவட்ட ரீதியான தமிழ்மொழி மூலமான நிகழ்வு நடைபெறுன்றது.

இந்நிலையில் இது தொடர்பான நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை அம்பாறை மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் யூ.எல்.அசாடீன் ஒருங்கிணைப்பு செய்தார்.

இதில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

## மாளிகைக்காடு அல் ஹுசைன் பாடசாலையில் ஆற்றுகை சாரல்



**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

அம்பாறையின் காரைதீவு கல்வி கோட்டத்துக்கு உட்பட்ட மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலயத்தில் மாணவ மன்ற ஆற்றுகை சாரல் நிகழ்வு அப்பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாணவர்கள் மத்தியில் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு அப்பாடசாலை அதிபர் ஏ.சீ.எம்.நளீம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதி அதிபர் ரிஸ்லியா உவைஸ், ஒழுக்காற்று சபை தவிசாளர் மௌலவி எம்.எஸ்.சாதிக், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பாடசாலை கலாசாரக் குழுவின் வழிகாட்டலின் கீழ் நடத்தப்பட்ட இந்நிகழ்வை பாடசாலை ஒழுக்காற்று சபை செயலாளர் ஏ.எம்.எம்.ரஜியுடன் இணைந்து ஆசிரியை ஆர்.ரஸ்மியா, விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம்.ஜஸாத் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

## மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் முதலிடம்

**(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)**

இம்முறை நடைபெற்ற மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் சம்மாந்துறை கல்வி வலயத்தில் இறக்காமம் அஸ்ரப் மத்திய கல்லூரியில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவர் எம்.கே.யூசுப் ஸயான் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

2023ஆம் ஆண்டிலும் மாணவர் எம்.கே.யூசுப் ஸயான் மாகாணத்தில் முதலிடத்தை பெற்று தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தை பெற்றிருந்தார். இவர் சிறந்த ஓவியராகவும் புகைப்பட கலைஞராகவும் பாடசாலை மட்டத்தில் பிரகாசித்து வருகின்றார்.

இதேவேளை இப்போட்டியில் இறக்காமம் அஸ்ரப் மத்திய கல்லூரியை சேர்ந்த தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவி ஆர்.ஆயிஷா இரண்டாமிடத்தையும் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர் அர்ஹப் பாதிஹ் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.



இந்நிலையில் இம்முறை சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய மட்டத்துக்கு இறக்காமம் அஸ்ரப் மத்திய கல்லூரி சார்பாக மூன்று மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக, அப்பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இம்மாணவர்களின் திறமைக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

## இடைவிலகிய 35 மாணவர்கள் பாடசாலையில் மீள இணைப்பு

**(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)**

அம்பாறையின் கல்முனை வலய பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய 68 மாணவர்களில் 35 மாணவர்கள் பாடசாலைகளில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளதாக, முறைசாரா கல்வி ஆசிரிய ஆலோசகர் முகம்மத் ராசீக் தெரிவித்தார்.

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் தொடக்கம் இற்றைவரை 35 மாணவர்கள் மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

இவ்வாறு பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களை வீடு தேடி சென்று மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கும் பணிக்கு பொலிஸார், பிரதேச செயலகத்தில் சிறுவர் நல பிரிவைச் சேர்ந்த 6 உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர் தனக்கு உதவியதாகவும், அவர் தெரிவித்தார்.

கட்டாய கல்வித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் இவ்வேளையில் பாடசாலை மாணவர்களை வேலைக்கு அமர்த்துவது தண்டனைக்குரிய விடயமாகும்.

தமது இந்தப் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த ஆசிரிய ஆலோசகர் முகம்மத் ராசீக், இந்த வருடம் முடிவதற்குள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய ஏனைய மாணவர்களையும் மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கும் பணி முடிவுக்கு கொண்டு வரப்படுமெனவும் குறிப்பிட்டார்.

கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் தலைமையில் அவரது ஆலோசனைக்கமைய இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## யாழ். மறைமாவட்ட குரு முதல்வரை சந்தித்தார் விஜயதாச ராஜபக்ஷ!





யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி வேட்பாளர், ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் அடிகளாரை நேற்று (07) சந்தித்து கலந்துரையாடியுள்ளார். **(பருத்தித்துறை விசேட நிருபர்)**

## வெளிநாடு அனுப்புவதாகக் கூறி மோசடி செய்த நபரை தாக்கிய யாழ். சகோதரர்களுக்கு விளக்கமறியல்

**(யாழ்.விசேட நிருபர்)**



வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி பண மோசடி செய்து தம்மை ஏமாற்றிய நபரொருவரை தாக்கி, அவரிடமிருந்து 05 இலட்சம் ரூபா பணத்தினை பறிமுதல் செய்த குற்றச்சாட்டில் யாழ். சகோதரர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் நேற்று முன்தினம் (06) மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, அவர்களை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர், பிரான்ஸ் நாட்டிற்கு செல்வதற்காக நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் சுமார் 25 இலட்சம் ரூபா பணத்தினை வழங்கியுள்ளார்.

பணத்தினை பெற்றுக்கொண்ட நபர், குறித்த இளைஞனை, சிங்கப்பூருக்கு அழைத்து சென்றுவிட்டு, மீண்டும் இலங்கைக்கு அழைத்து வந்துள்ளார். அத்துடன் பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்பி வைப்பதாக நீண்ட நாட்களாக ஏமாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், நீர்கொழும்பைச் சேர்ந்த நபர், யாழ்ப்பாணம் சென்ற வேளை, அதனை அறிந்துக்கொண்ட பாதிக்கப்பட்ட இளைஞனும், அவரது சகோதரனும் குறித்த நபருடன் முரண்பட்டுள்ளனர். அத்துடன் அவரை தாக்கி அவரிடம் இருந்து 05 இலட்ச ரூபாய் பணத்தினையும் பறிமுதல் செய்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான நபர், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், தாக்குதல் நடத்திய சகோதரர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பளை மத்திய கல்லூரியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மருத்துவ முகாம்

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மருத்துவ முகாமொன்று, பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் நேற்று (07) நடைபெற்றது.

பளை மத்திய கல்லூரியில் கல்வி பயிலும், விசேட தேவையுடைய மாணவர்களின் உடல் நிலையை ஆராய்வதற்காக குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இந்த மருத்துவ முகாமிற்கு வைத்தியர் அருமைத்துரை, நிதி பங்காளர் நலன் விரும்பி அன்பு மற்றும் ஆசிரியர் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் தபால் ஊழியரின் வீடு தீக்கிரை

**(யாழ்.விசேட நிருபர், கரவெட்டி தினகரன் நிருபர்)**



யாழ்ப்பாணத்தில், தபால் ஊழியர் ஒருவரின் வீடொன்று வன்முறை கும்பல் ஒன்றினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் ஆழியவளை பகுதியைச் சேர்ந்த தபால் ஊழியர் ஒருவரின் வீடே இவ்வாறு நேற்று முன்தினம் (06) தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக மருதங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

தபால் ஊழியர், தனது மனைவி மற்றும் குழந்தையுடன் வெளியில் சென்ற வேளை, வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் ஒன்று வீட்டிற்கு தீ வைத்து விட்டு தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரம் தாக்கி இராணுவ சிப்பாய் பலி!

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமொன்றில் கடமையாற்றும், இராணுவ சிப்பாய் ஒருவர் மின்சார தாக்குதலுக்கு இலக்காகி நேற்று (07) உயிரிழந்துள்ளார்.

கேப்பாபிலவு பகுதியில் உள்ள ஆறாவது காலாட்படை பட்டாலியனில் கடமையாற்றும் கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய லான்ஸ் கோப்ரல் நிலையுடைய படையினரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது உடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான தமிழக மீனவர்கள் 19 பேருக்கு 01 வருட சிறை

### தண்டனையை 05 வருடங்களுக்கு ஒத்திவைத்து விடுவிப்பு

**(யாழ்.விசேட நிருபர் )**

யாழ். நெடுந்தீவு கடற்பரப்புக்குள் கைதான 19 தமிழக மீனவர்களுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, 05 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

படகோட்டிகள் மூவருக்கு தலா 04 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அபராதத் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்



பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு வேறு தினங்களில் கைதான 31 தமிழக மீனவர்களின் வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

ஜூன் மாதம் 22ஆம் திகதி கைதான 22 தமிழக கடற்தொழிலாளர்களின் வழக்கு விசாரணையின்போது, 19 தொழிலாளர்களுக்கும் ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அதனை ஐந்து வருட காலத்துக்கு ஒத்திவைத்துள்ளது. ஜூலை 23ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 09 தமிழக மீனவர்களின் வழக்கு விசாரணைகளை தொடர்ந்து 09 பேரின் விளக்கமறியலையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் நீதிமன்றம் நீடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா

**(யாழ் .விசேட நிருபர்)**




'யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா 2024' நாளை (09) ஆரம்பமாகி எதிர்வரும் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில், உள்ளூர் மற்றும் சர்வதேச எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில், யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றமானது இந்த புத்தக கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

அதன்படி, இந்த புத்தக திருவிழாவானது, யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் நாளை (09) காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (11) மாலை வரை நடைபெறவுள்ளது.

இலங்கையிலிருந்து மட்டுமன்றி, பல்வேறு நாடுகளில் இருந்து பல்வேறுபட்ட புத்தக விற்பனை நிறுவனங்கள் மற்றும் வெளியீட்டகங்களின் புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலக்கை நோக்கி முன்னேறும் சஹ்மி முல்லைத்தீவை சென்றடைந்தார்!

இலங்கை நாட்டை சுதந்திரமாக, நடந்தே சுற்றி வரும் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ள, பேருவளையைச் சேர்ந்த சஹ்மி ஷஹீத் கடந்த 5 ஆம் திகதி வடமாகாணத்தின் முல்லைத்தீவைச் சென்றடைந்துள்ள நிலையில், யாழை நோக்கிய தனது பயணத்தையும் ஆரம்பித்துள்ளார்.



கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி பேருவளையில் தன் பயணத்தை ஆரம்பித்த, 25 வயதுடைய இளம் யூட்யூபரான இவர், இலங்கையை நடந்தே சுற்றி வரும் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அதன்படி, கடந்த ஆம் 05 தனது 24 ஆவது நாள் பயணத்தை கொக்கல பிரதேச மக்களின் பேராதரவோடும், பிரார்த்தனைகளோடும் ஆரம்பித்து முல்லைத்தீவை சென்றடைந்துள்ளார் சஹ்மி ஷஹீத்.

தன் சாதனைப் பயணத்தின் முதல் நாட்கள் கடந்து வந்த மாவட்டங்களில், கடும் வெயிலுடனான வானிலையை சந்தித்த சஹ்மி, இன்று வடமாகாணத்தில் நிலவும் கடும் மழையுடனான வானிலையில், மழையை அலட்சியமெனக் கருதி தன் சாதனை இலக்கை நோக்கி பயணித்து வருகிறார்.

மேலும், இவரது பயணத்தின் அடுத்தகட்டமாக, யாழ். நோக்கிய பயணம் நேற்று முன்தினம் (06) ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, யாழில் சஹ்மியை உற்சாகப்படுத்துவதற்காக, பேருவளை இளைஞர்கள் யாழ். நோக்கி செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பிரசித்த ஏல விற்பனை

4ம், 5ம் ஜூலை 2023, 29ம், 30ம் நவம்பர் 2023, 28ம், 29ம் டிசம்பர் 2023, 29ம், 30ம் ஜனவரி 2024, 26ம், 27ம் பிப்ரவரி 2024, 27ம், 28ம் மார்ச் 2024, 29ம், 30ம் ஏப்ரல் 2024, 30ம், 31ம் மே 2024, 27ம், 28ம் ஜூன் 2024, 29ம், 30ம் ஜூலை 2024 இல் "மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பிஎல்சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| கொத்தாடுவ புதிய நகரம், தெமட்டகொட, தொட்டலங்க, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, ஹோமாகம, மஹரகம நகர கிளை, மஹரகம, கொட்டாவ, அதுருகிரிய, அம்பலாங்கொட, கராபிட்டிய, காலி, தங்காலை, சங்கராஜ மாவத்தை-கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொகுவல, டாம் வீதி, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொறளை, பொறளை நகர கிளை, மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, மாலபே, கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, பிறீமியர் கொழும்பு 07, கொம்பனித் தெரு, கார்ப்பரேட் அலுவலகம், தலைமை அலுவலகம் கொழும்பு 07, மாவனல்ல, மினுவங்கொட, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிட்டிய | 24 ஆகஸ்ட் 2024 |
| எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரண, பண்டாரகம, மத்துகம, பதுரலிய, பலாங்கொடை, ரத்தினபுரி, அவிசாவளை, எஹலியகொட, ஹன்வெல்ல, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவ, கெசல்வத்த, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, கல்கிச, ரத்மலான, நகர அலுவலகம், அளுத்கம, பேருவளை, களுத்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, எம்பிலிப்பிட்டிய, திஸ்ஸமஹாராம, கொலன்னாவ, பதுளை நகர கிளை, பதுளை, அம்பலாந்தோட்டை, பண்டாரவளை | 27 ஆகஸ்ட் 2024 |
| நுவரெலியா, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, தெஹியத்தகண்டி, குருநாகல் நகர கிளை, குருநாகல் பிறீமியர் நிலையம், குருநாகல், குளியாபிட்டிய, நாரம்மல, கலேவேல, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகர கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டிய, மாத்தளை, கெலிஓயா, ஆனமடுவ, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, ஹட்டன், மஸ்கெலிய, திகனா, தம்புள்ளை, புத்தளம், கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளிய, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கனேமுல்ல, சிலாபம், கொச்சிக்கடை-நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, கட்டுநாயக்க-அவிரிவத்த, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகந்த, கல்பிட்டிய, கெக்கிரவ, அனுராதபுர நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சிய, தம்புத்தேகம, நொச்சியகம, பொலன்னறுவை, மெதிரிகிரிய, கந்தலை, ஜம்பெட்டா, கிராண்ட்பாஸ் | 28 ஆகஸ்ட் 2024 |
| யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாண நகரம், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, மல்லாவி, வட்டுக்கோட்டை, கோப்பாய், கொடிகாமம், பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பளை, வவுனியா, பேசாலை, சங்கானை ,மன்னார், மருதங்கேணி, வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, செங்கலடி, வாழைச்சேனை, கிண்ணியா, திருகோணமலை, கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, கல்முனை, ஏறாவூர், வஹரை, சேருநுவர, கிரன், திருகோணமலை நகரம், வவுணதிவு, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, மத்திய முகாம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, திருக்கோவில் | 05 செப்டம்பர் 2024 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE

உதவி பொது மேலாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.



## பெறுகை அறிவித்தல்

### கைத்தறி நெசவுக் கைத்தொழில் கண்காட்சி, விற்பனை சந்தை மற்றும் விருது வழங்கல் நிகழ்வு 2024

2024 டிசம்பர் மாதம் 06, 07, 08 ஆகிய மூன்று தினங்கள் BMICH இல் நடத்துவதற்கு குறித்த கைத்தறி நெசவுக் கைத்தொழில் கண்காட்சி விற்பனை சந்தை மற்றும் விருது வழங்கும் நிகழ்வை நடத்துவதற்காக கீழ்க்காணும் சேவைகளை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. வெளி அரங்கை அமைத்தல் (அகலம் 20 மீட்டர் X நீளம் 60 மீட்டர்) மற்றும் 40 விற்பனைக் கூடங்களை அமைத்தல்
2. விருதுகளை தயாரித்தல்
3. முன்பக்க தோரணம் தயாரித்துப் பொருத்துதல்
4. ஒலிபெருக்கி வசதிகள் மற்றும் மின் அலங்காரங்களை வழங்குதல்
5. வீடியோ பாடமாக்கல் மற்றும் புகைப்படம் எடுத்தல் (உற்சவ நிகழ்வுகள் விற்பனை சந்தை மற்றும் கண்காட்சி)
6. அச்சு விடயங்கள் (துண்டுப் பிரசுரம் 1000/ சான்றிதழ் பத்திரம் அச்சிடல் 188/ பின்னணி அமைத்தல் 01)
7. டிஜிட்டல் அச்சு பிரசார பலகைகள் 04
8. கண்காட்சி முகாமைத்துவம்
9. மத்திய பிரசார விடயங்கள் (மின்)
10. மேல் நாட்டு நடனம் மற்றும் சங்கு ஊதும் கலைஞர்களைப் பெற்றுக்கொள்ளல்.

1. 2024 ஓகஸ்ட் 08 முதல் 2024 ஓகஸ்ட் 28 ஆம் திகதி வரை (அரச விடுமுறை தினங்கள் தவிர்த்து) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை 3ஆம் மாடி, செயலகக் கட்டிடம், மாளிகாவத்த, கொழும்பு -10 முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்தில் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. 2024 ஓகஸ்ட் 29ம் திகதி மு.ப. 10.00 இற்கு முன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்களை மேற்படி முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் அல்லது இம் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. 2024 ஓகஸ்ட் 29ம் திகதி மு.ப. 10.00 இற்கு கேள்விப் பெட்டியில் பொறியிடப்படுவதுடன் பின்னர் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. கேள்விகளைத் திறத்தல் 2024 ஓகஸ்ட் 29ம் திகதி மு.ப. 10.00 இற்கு கேள்வி ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் அன்றே வருகை தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. ஒவ்வொரு சேவை சார்பாகவும் வேறுவேறாக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 கேள்வி விண்ணப்பக் கட்டணம் அறவிடப்படும். அதற்கு மேலதிகமாக கண்காட்சி முகாமைத்துவம், விருதுகள் தயாரித்தல் மற்றும் வெளி அரங்கு அமைத்தல் மற்றும் 40 விற்பனைக் கூடங்களை தயாரித்தல் போன்ற வேலைகளுக்காக ரூ. 10,000.00 மீளளிக்கப்படும் வைப்புத் தொகையையும், முன்பக்க தோரணம் அமைத்தல், ஒலி பெருக்கி வசதிகள் மற்றும் மின் அலங்காரங்களை அமைத்தல், வீடியோ படமாக்கல் மற்றும் புகைப்படமெடுத்தல், அச்சு விடயங்கள், டிஜிட்டல் அச்சு பிரசார பலகைகள் 4 அமைத்தல் போன்ற சேவைகளுக்காக ரூ. 5,000.00 மீளளிக்கப்படும் வைப்புத் தொகையும் அறவிடப்படும்.
6. கேள்வி உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நெசவுக் கைத்தொழில் கண்காட்சி 2024 'குறித்த சேவையின் பெயர்' குறிப்பிடப்படல் வேண்டும்.
7. ஒவ்வொரு சேவைக்கும் வேறு வேறாக கடித உறைகளை பாவித்தல் வேண்டும்.
